பக்கம்: எட்டு
விலை ரூபா 5.00

24 JAN 2001
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

தலைமுரர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

லாலா சோப்
அதிர்ஷ்டலாபச்சீட்டு
பரிசுகள்
தங்க நாணயங்களும்
பெறுமதியான சாறிகளும்
ரிக்கற் விபரம் 10/-
லாலா சோப்
அச்சுவேலி
(கி-1045)

வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 தை 11 புதன்கிழமை (24-01-2001) தொலைபேசி: 3378 ஒலி: 36

சமாதான பேச்சிற்கு உதவியாக மேலும்
ஒரு மாதகால யுத்த நிறுத்தத்தை
எரிக்சோல் மூலம் புலிகள் அறிவிப்பு!

லண்டன் தலைமைச்செயலகம் அறிக்கை

(லண்டன்)

நீண்டகால இன யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வருவதற்கான நல்லெண்ண சமாதானமுயற்சியாக யுத்தநிறுத்தத்தை மேலும்ஒரு மாதகாலத்திற்கு நீடிப்பதாக லண்டனில்உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைச் செயலகம் நேற்று அறிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் முதலாவது யுத்த நிறுத்த அறிவிப்பை அடுத்து யுத்தத்தை முழுமூச்சுடன் அரசு நடத்தி வரும் இவ்வேளையில், மேலும் ஒருமாத கால யுத்த நிறுத்தத்தை விடுதலைப்புலிகள் அறிவித்திருப்பதானது, சமாதானத்தின்பால் விடுதலைப்புலிகள் கொண்டுள்ள நம்பிக்கை உணர்வையும், விசுவாசத்தன்மையையும் எடுத்துக் காட்டுவதாக சர்வதேச சமூகம் தெரிவித்துள்ளது.

இனப்பிரச்சினை தொடர்பாக சமாதான முயற்சியில் ஈடுபட்டுவரும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்மின் வேண்டுகோளை அடுத்து தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையினால் யுத்தநிறுத்தத்தை மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீடிப்பதாக நோர்வே அரசு மூலம் இலங்கை அரசிற்கு

→ 8ஆம் பக்கம் பார்க்க

யுத்த நிறுத்த நீடிப்பு அரசிற்கு விடுக்கப்பட்ட சவால்
ஸ்ரீகாந்தா பி. பி. சிக்குபேட்டி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் மேலும் ஒருமாத காலத்துக்கு யுத்த நிறுத்தத்தை நீடித்துள்ளமையை, தமிழினத்துடன் சேர்ந்து நாமும் முழுமனதோடும் மகிழ்ச்சியோடும் வரவேற்கிறோம்.

ரெலோ அமைப்பின் தலைவர் ஸ்ரீகாந்தா, விடுதலைப் புலிகள் மேலும் ஒரு மாத காலத்துக்கு யுத்த நிறுத்தத்தை நீடித்தமை தொடர்பாக பி பி.சிக்கு வழங்கிய பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் அவர்மேலும் தெரிவித்ததாவது:

அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் யுத்த நடவடிக்கைகளுக்கு விடுதலைப்புலிகள் இவ் யுத்த நிறுத்த நீடிப்பின் மூலம் ஓர் அரசியல் சவாலை விடுத்துள்ளனரென்றே நாம் கருதுகின்றோம்.

இவ் யுத்த நிறுத்தத்துக்கு சாதகமாக அரசாங்கம் பதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

சிற்றிஒவ் றிங்கோ வாரத்தில் மூன்று சேவை

எதிர்வரும் 29ந்திகதிசிற்றி ஒவ்றிங்கோ கப்பல் வாரத்தில் மூன்றுதடவை கப்பல்பயண சேவையில் ஈடு படுமென தெரியவருகிறது.

இதன்படி எதிர்வரும்30ந் திகதியும் அடுத்த மாதம்முதலாம் மூன்றாம்திகதியும் இக் கப்பல்சேவை இடம்பெறும் என எதிர்பார்க்கப் படுகிறது.

மற்றொரு செய்தி5ம்பக்கத்தில். (ந)

ஆனையிறவை மீட்கும்
கினிகிர-9 இராணுவ நடவடிக்கை
இரு சிப்பாய் பலி :6 பேர் காயம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளிடம் இழந்த ஆனையிறவுப்படைத்தளத்தை மீண்டும் படையினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கான கினிகிர9இன் இரண்டாவது கட்டநடவடிக்கையை நேற்று முன் தினம் இரவுஆரம்பித்துள்ளனர்.

இந்தஇராணுவ நடவடிக்கையின்போது இரண்டுபடையினர் கொல்லப்பட்டதாகவும் 6படையினர் காய

→ 8ஆம் பக்கம் பார்க்க

புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பு சமாதான முயற்சிக்கு சாதகம்
நோர்வே தூதுவர் எரிக்சோல் பேட்டி

விடுதலைப் புலிகள் தமது ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை மேலும் ஒரு மாத காலம் நீடித்திருப்பது வரவேற்கத்தக்க விடயம் என நோர்வேயின் சிறப்பு பிரதி எரிக் சோல்ஹெய்ம் நேற்றிரவு லண்டன் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த நீடிப்பு வெளியான பின்பு மேற்படி வானொலிக்கு கருத்து தெரிவித்துள்ள அவர்;

→ 8ஆம் பக்கம் பார்க்க

பொ.ஐ. முன்னணி ஆட்சியில் பொருளாதாரம் வீழ்ச்சி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்றக் குழுக்கூட்டம் நேற்றுக்காலை கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் நடைபெற்றது.

பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொரு

(8 ஆம் பக்கம் பார்க்க)

ஐரோ. யூனியன் தூதுக்குழு கொழும்பு வரும்!

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் விடயம் பற்றி ஆராய்வதற்கென, ஐரோப்பிய யூனியனின் தூதுக்குழு அடுத்த வாரம் கொழும்பு வருகின்றது.

இத்தூதுக்குழு கொழும்பில் தங்கியிருக்கும் காலத்தில் ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர்கள் மற்

→ 8ஆம் பக்கம் பார்க்க

பேச்சுவார்த்தையைப் பொறுத்தே யுத்த நிறுத்தத்தை ஆராயலாம்
அமைச்சர் ஜயரத்ணா தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தமது ஒருதலைப் பட்சமான யுத்த நிறுத்தத்தை மேலும் ஒரு மாதகாலம் நீடிப்பதாக விடுத்துள்ள அறிவித்தல் குறித்து அரசதரப்பிலிருந்து இது வரை உத்தியோகபூர்வமான கருத்துக்கள் எதுவும் வெளியாகவில்லை. இன்று அல்லது நாளை வெளியாகும் என அரசியல் அவதானிகளும் ராஜதந்திர தரப்புகளும் எதிர்பார்க்கின்றன.

→ 8ஆம் பக்கம் பார்க்க

புலிகளுடன் அரசு பேச்சை ஆரம்பிக்க சர்வ.சமூகம் வலியுறுத்த வேண்டும்
அவுஸ்ரேலியதமிழ்ஒன்றியம்கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம்தனது யுத்த முனைப்பைக் கைவிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்கும் வகையில் அவுஸ்ரேலிய அரசாங்கம் உட்பட சர்வதேச சமூக அமைப்புகள் அனைத்தும் இலங்கை அரசை நிர்ப்பந்திக்க வேண்டும்.

இவ்வாறு அவுஸ்ரேலிய தமிழ் அமைப்புக்கள் ஒன்றியம் கோரியுள்ளது.

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தம் தொடர்பாக வெளியிட்ட பொது அறிக்கை

→ 8ஆம் பக்கம் பார்க்க

நீதியமைச்சின் கீழ் தொல்லை தவிர்புக்குழு
ஜனாதிபதி நடவடிக்கை

(கொழும்பு)

சட்டவிரோதக் கைதுகள் மற்றும் துன்புறுத்தல்களைத் தவிர்ப்பதற்கென அமைக்கப்பட்ட தொல்லை தவிர்புக் குழுவை நீதியமைச்சின் கீழ் கொண்டுவருவதற்கு ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க முடிவுசெய்துள்ளார்.

இனவிவகார தேசியஒருங்கிணைப்பு அமைச்சின் கீழ்

→ 8ஆம் பக்கம் பார்க்க

07 FEB 2001

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

ஆளும் கட்சி எம்.பி.க்கள் கவலை

[கொழும்பு]

பொருட்களின் விலை உயர்வு குறித்து ஆளும் கட்சி எம்.பீக்கள் பலத்த அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

அண்மையில் இடம்பெற்ற பாராளுமன்றக் கூட்டத்தின் போது, மேற்படி எம்.பிக்கள் பலர், பொருட்களின் விலை யேற்றத்தையடுத்து தத்தம் தொகுதிகளிலேயே மக்களிடத்து எதிர்ப்புணர்வுகள் ஏற்பட்டிருப்பதாக கவலைவெளியிட்டுள்ளனர். (உ-9]

சதுரங்கப் ..

(7ம் பக்கத் தொடர்ச்சி)

களில் முதலிடம் பெற்றமை சுட்டிக் காட்டப்பட வேண்டிய தொன்றாகும்.

ஆனந்தின் ஆட்டத்தை சதுரங்க வல்லுநர்கள்.

மூன்று வகையாகப் பிரிக்கின்றனர்.

1) ஆர்ப்பாட்டமான துவக்க ஆட்டம்.

2) அதிரடியான நடுத்தர ஆட்டம்.

3) தன்னம்பிக்கையுடன் ஆடும் இனிமையான முடிவு ஆட்டம் என்பனவே அவை. தனது கடிகாரத்தை பார்த்து கொண்டே ஆனந் வேகமாக ஆடும் போது எதிர்த்து ஆடும் வீரருக்கு அந்த கடிகாரம்கூட எதிரியாக தெரியும். அந்த அளவிற்கு அவரின் வேகம் ஈடு கொடுக்கமுடியாதபடி அமைந்திருக்கும் என்று உலகப் பிரசித்தி பெற்ற சதுரங்க ஆட்ட வீரன் கடா காம்ஸ்கி கூறியுள்ளார்.

1997 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஆன்பர், ரேபிட், பிளைற் போட்டிகளில் ஒட்டு மொத்தமாக 03 பட்டங்களையும்வென்றெடுத்தார். இதில் உலகின் முன்னணி வீரர்கள் அத்தனை பேரும் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஆச்சரியமான வெற்றி

உலக சம்பியன் காஸ்ரோவும் பீப்புளும் கம்பியூட்டருடன் மோதிய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த போட்டிக்குப் பின்பு 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி ஹேகி நகரில் ஆனந் கம்பியூட்டர்களுடன் மோதினார். இதில்குறிப்பிடத்தக்க அம்சம் என்ன வென்றால் 6 கம்பியூட்டர்களுடனும் ஒரேநேரத்தில் மோதினார் என்பதுவே. ஈற்றில் ஆனந் 4.2 என்ற அடிப்படையில் வெற்றியீட்டி எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்.

உலகப் புகழ் பெற்ற இந்த வீரரின் பயிற்றுநர் இவரின் தாயாரே. உலகப்புகழ்பெற்ற பின்பு கூட அன்னையின் வழி நடத்தலிலேயே தான் ஆடி வருவதாக அண்மையில் அவர் தொலைத் தொடர்பு சாதனங்களுக்கு அளித்தபேட்டியில் பெருமையுடன்கூறியுள்ளார். மற்ற உலக சம்பியன்களுடன் ஒப்பிடும் போது ஆனந் மாறுபட்டு தனித்து நிற்கிறார். உலகின் முன்னணி சதுரங்க வீரர்கள் வினோதமான விசித்திரமான பழக்க வழக்கங்களுக்கு பெயர் பெற்றவர்கள். மேலும் அவர்கள் இதுபோன்ற பழக்கவழக்கங்கள் இருந்தால் தான்முன்னணிவீரராகஇருக்க முடியும் என்ற நம்பிக்கையை உடையவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் ஆனந் இக் கூற்றை தவறு என்று தமது பண்பாட்டினால் நிரூபித்துக் காட்டி மற்ற வீரர்களிடம் இருந்து தனித்து நின்று ஆனந் ஒரு விளையாட்டு வீரன் மாத்திரமல்ல ஒருவானுக்கு இருக்க வேண்டிய (SPORTS MAN SPRIT) அபரிதமாக அவரிடம் காணப்படுவதால் அவரை எல்லோரும் ஜென்ரில்மன் என்று செல்லமாக அழைக்கின்றனர்.

பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

இம் மாதம் 22 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களது இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத்தரப்படுகின்றன.

சங்கானை

161666 ஏ	176931 ஏ
176959 ஏ	176959 பி
176959 சி	178702 ஏ
178878 ஏ	178878 பி
178920 ஏ	178920 பி
178920 சி	179019 ஏ

யாழ்ப்பாணம்

120776 ஏ	120776 பி
120776 கி	120776 டி
120776 ஈ	152098 ஏ
152098 பி	152098 சி
160958 ஏ	168769 ஏ
170046 ஏ	175387 ஏ
175387 பி	175387 சி
175387 டி	175419 ஏ
175419 பி	175419 சி
175491 ஏ	175579 ஏ
175579 பி	178015 ஏ
178183 ஏ	178183 பி
178243 ஏ	178243 பி
178243 சி	178297 ஏ
178338 ஏ	178338 பி
178366 ஏ	178367 ஏ
178367 பி	178374 ஏ
178374 பி	178378 ஏ
178383 ஏ	178392 ஏ
178392 பி	178393 ஏ
178393 பி	178404 ஏ
178404 பி	178405 ஏ
178405 பி	178405 சி
178406 ஏ	178406 பி
178445 ஏ	178445 பி
178452 ஏ	178462 ஏ
178462 பி	178478 ஏ
178478 பி	178480 ஏ
178480 பி	178480 சி
178481 ஏ	178486 ஏ
178486 பி	178492 ஏ
178492 பி	178492 சி
179815 ஏ	179815 பி
179815 சி	179822 ஏ
179822 பி	179822 சி
179822 ஈ	179822 எவ்
179832 ஏ	179836 ஏ
179845 ஏ	
179858 ஏ	179858 பி
779858 சி	179858 டி
179858 ஈ	179862 ஏ
179862 பி	179862 சி
179871 ஏ	179887 ஏ
179887 பி	179887 சி
179904 ஏ	179978 ஏ
179980 ஏ	180004 ஏ
180037 ஏ	180039 ஏ

ஊர்காவற்றுறை

13844 ஏ	14461 ஏ
14479 ஏ	14482 ஏ
14482 பி	14482 சி
14484 ஏ	14485 ஏ
14485 பி	14485 சி
14485 டி	14486 ஏ
14486 பி	14486 சி
14486 டி	

கோப்பாய்

167654 ஏ	177258 ஏ
177258 பி	177287 ஏ
177287 பி	179515 ஏ
178149 ஏ	178149 பி
178271 ஏ	178271 பி

நல்லூர்

171274 ஏ	171628 ஏ
177139 ஏ	177283 ஏ
177283 பி	177310 ஏ
177310 பி	177310 சி
177310 டி	177310 ஈ
177310 எவ்	159057 ஏ
159057 பி	159057 சி
159057 டி	159057 ஈ
159145 ஏ	158'45 பி
159145 சி	159145 டி
168887 ஏ	168887 பி
168887 சி	172062 ஏ
7ு2062 பி	172062 சி
112062 டி	172104 ஏ
173551 ஏ	173551 பி
173607 ஏ	175238 ஏ
175239 ஏ	175239 பி
175239 சி	175239 டி
175280 ஏ	175280 பி
175569 ஏ	178138 ஏ
178138 பி	178138 சி
178140 ஏ	178297 பி
178297 சி	178373 ஏ
178373 பி	178373 சி
178373 டி	178411 ஏ
178411 பி	178420 ஏ
178420 பி	178427 ஏ
178427 பி	178435 ஏ
178435 பி	178446 ஏ
178446 பி	178446 சி
178448 ஏ	178449 ஏ
178449 பி	178451 ஏ
178453 ஏ	178458 ஏ
178459 ஏ	178459 பி
188470 ஏ	178470 பி
178483 ஏ	178483 பி
178499 ஏ	178499 பி
179859 ஏ	179859 பி
179880 ஏ	179901 ஏ
179901 பி	179947 ஏ
179947 பி	179947 சி
179947 டி	190020 ஏ
151924 ஏ	170375 ஏ
175860 ஏ	176640 ஏ
176651 ஏ	176703 ஏ
176839 ஏ	176994 ஏ
178558 ஏ	178730 ஏ
178796 ஏ	178796 பி
178796 சி	178796 டி
187606 ஏ	187606 பி

சண்டிலிப்பாய்

166494 ஏ	175874 ஏ
175874 பி	175874 சி
175873 டி	175874 ஈ
175874 எவ்	175874 ஜி
176521 ஏ	176795 ஏ
176805 ஏ	176805 பி
178524 ஏ	178533 ஏ
178534 ஏ	178534 பி
178556 ஏ	178575 ஏ
178672 ஏ	178672 பி
178672 சி	178711 ஏ
178711 பி	178711 சி
178715 ஏ	178725 ஏ
178782 ஏ	178782 பி
178829 ஏ	

தெல்லிப்பழை

172776 ஏ	175883 ஏ
176587 ஏ	176587 பி
178673 ஏ	178673 பி
178673 சி	178673 டி
178673 ஈ	178673எவ்
178704 ஏ	178728 ஏ
178728 பி	179130 ஏ
179130 பி	

உடுவில்

177026 ஏ	177028 ஏ
177028 பி	177057 ஏ
177248 ஏ	177256 ஏ
177256 பி	177256 சி
177256 டி	177256 ஈ
177256 எவ்	177256 ஜி
177256 எச்	177284 ஏ
177302 ஏ	177302 பி
177302 சி	177302 டி
177312 ஏ	177312 பி
177312 சி	179539 ஏ
128734 ஏ	128734 பி
128734 சி	176529 ஏ
176529 பி	176529 ஈ
176923 ஏ	176923 பி
176923 சி	176574 ஏ
178624 ஏ	178747 ஏ
178747 பி	178824 ஏ
178824 பி	
178833 பி	178834 ஏ
178834 பி	179081 ஏ
179111 ஏ	179111 பி
179111 சி	179112 ஏ

வேலணை

14458 ஏ	14458 பி
14458 சி	14472 ஏ
14472 பி	14472 சி
14483 ஏ	14486 ஈ
14486 எவ்	14487 ஏ
14487 பி	14487 சி
14487 டி	

மின்சாரம் வழங்க ஏற்பாடு

[அச்சுவேலி]

அச்சுவேலி தெற்கு நாவலம்பகுதி வீதிப்பகுதி குடியிருப்பாளர்களுக்கு மீள மின்சாரம் வழங்குவதற்காக மேற்படி வீதிப்பகுதிக்கு மின்சார வேலைகள் நிறுவப்பட்டுள்ளன.

இவ்வீதியில் அமைந்துள்ள கந்தசுவாமி கோயில் வரை சுமார் 400 மீற்றர் தூரப்பகுதிக்கு மட்டுமே மின்கேபிள்கள் நிறுவப்பட்டுள்ளபோதிலும் இதுவரை அப்பகுதியில் எந்தவொரு குடியிருப்பாளருக்கும் மின்னிணைப்பு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

[உ-14]

தே. இ. சே. மன்ற கலாசாரப் போட்டி முடிவுகள் வெளியாகின

[ஈச்சமோட்டை]

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ் மாவட்டத்தினரால் நடைமுறைப்படுத்தப்பட்ட 2000 ஆம் ஆண்டுக்கான மாவட்டமட்ட கலாசாரப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. அவை வருமாறு,

★ பேச்சுப் போட்டி
1 ஆம் இடம்- இ. செந்தூர்ச் செல்வன்
2 ஆம் இடம்- எல். அமலானந்தக் குமார்
3 ஆம் இடம்- இ சர்வேஸ்வரா

★ அறிவிப்பாளர் போட்டி
1 ஆம் இடம்- எஸ். சுதர்சன்
2 ஆம் இடம்- எம். ரஞ்சித்
3 ஆம் இடம்- இ. செந்தூர்ச் செல்வன்

★ புதியநிர்மாணிப்புநடிப்பு
1 ஆம் இடம்- கே. ஸ்ரீபாஸ்கரன்
2 ஆம் இடம்- கே. நீபன்
3 ஆம் இடம்- கே. அமல்ரன்

★ பரத நாட்டியம்
1 ஆம் இடம்- எம் ரோகினி
2 ஆம் இடம்- கே. யசிந்தினி
3 ஆம் இடம்- பி. துளசி

★ தனிநடிப்பு
1 ஆம் இடம்- பி. கேதீஸ்
2 ஆம் இடம்- எஸ். வரதகுமார்
3 ஆம் இடம்- எ அற்புதராஜ்

★ கர்நாடக சங்கீதம்
1 ஆம் இடம்- கே. நீபன்
2 ஆம் இடம்- இ. ஜெயகாந்தன்
3 ஆம் இடம்-இ.சோ.குமுதா

★ ஓகன்
1 ஆம் இடம்- எஸ் றஜிவன்
2 ஆம் இடம்-எம் கிருபாமோரி
3 ஆம் இடம்- பி ஜே. நிரோசன்

★ மிருதங்கம்
1 ஆம் இடம்- பி. சியாம்ம கிருஸ்ணன்
2 ஆம் இடம்- என். மாதவன்
3 ஆம் இடம்- கே. தர்மசேகரன்

★ வயலின்
1 ஆம் இடம்- கே. வனஜா
2 ஆம் இடம்-எம் கிருபாமோரி
3 ஆம் இடம்- எஸ். ஜெயமாலினி

★ கிராமியப்பாடல் (தனி)
1 ஆம் இடம்- எம். ஜெயானந்தவதி
2 ஆம் இடம்- இ. ஜெயகாந்தன்
3 ஆம் இடம்- கே. ஜெகதீசன்

★ கிராமிய நடனம்
1 ஆம் இடம்- த. லோகேஸ்வரி

★ கவிதை
1 ஆம் இடம்- பி. அருட்செல்வன்
2 ஆம் இடம்- கே. தர்மினி
3 ஆம் இடம்-ஜரின்சுபத்திரா ஜீவரட்ணம்

★ சிறுகதை
1 ஆம் இடம்- எஸ் ஆரபி
2 ஆம் இடம்- ஏ. ஜீவா
3 ஆம் இடம்-ஜரின்சுபத்திரா ஜீவரட்ணம்

(உ-59)

தேசிய மட்ட போட்டிகளில் யாழ். மாவட்டத்தவர் கலந்து கொள்வதில் சிக்கல்

தே. இ. சே.ம தெரிவிப்பு

[ஈச்சமோட்டை]

யாழ் மாவட்ட இளைஞர், யுவதிகள் தேசிய மட்டப் போட்டிகளில்கலந்துகொள்ள முடியாமைக்குப் போக்குவரத்துப் பிரச்சினையே பிரதான காரணமாகும் என தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ் மாவட்ட வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கடந்த ஆண்டு பிரதேசமட்டத்தில் பேச்சு, அறிவிப்பாளர், அபிநயநடிப்பு, ஓகன், மிருதங்கம், கர்நாடக சங்கீதம், கிராமியப்பாடல், பரதநாட்டியம், புதிய நிர்மாணநடனம், வயலின், கிராமியநடனம், கவிதை, கட்டுரை, சிறுகதை போன்ற போட்டிகளில் வெற்றியீட்டி மாவட்டமட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டு பின்னர் தேசிய மட்ட போட்டிகளுக்கு தெரிவாகியோர் போக்குவரத்து சிக்கல்கள் காரணமாக அதில் பங்கு பெறும் வாய்ப்பை இழந்தனர்

இதில் பேச்சு, வயலின், புதியநிர்மாணிப்பு நடனம் ஆகிய போட்டிகளுக்காக ஒருசில இளைஞர், யுவதிகளே பங்குபெற்றினர்.

இவ்வாறு இப்போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக யாழ் மாவட்ட இளைஞர்கள் அரிய சந்தர்ப்பங்களைஇழக்க வேண்டியுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் கவலை வெளியிட்டுள்ளன. (உ-59)

கூடைப் பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வை. எம். சி. எ. அனுசரணையுடன் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் பாடசாலைகளுக்கிடையே நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று கொக்குவில் இந்துக்கல்லூரி ஆடுகளத்தில்,

சென்ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதுகின்றது. (உ)

பதிவு செய்ய கோரிக்கை

[மந்துவில்]

கரம்பைக் குறிச்சி அ.த.க பாடசாலையில் கல்வி கற்று தற்பொழுது வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான இலவசப் பாடப்புத்தகம், சீருடை வழங்குவதற்கு வசதியாக மாணவர்கள் தமது பெயர் விபரங்களை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ந-5-39)

குடும்பப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 20 ஆம் திகதியன்று தனக்குத்தானே தீ மூட்டி ஆபத்தான நிலையில் யாழ் போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண்மணி நேற்று முன்தினம் மரணமானார்.

கொடிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து கதிரிப்பாய் அச்சுவேலியில் வசித்து வந்த இரு பிள்ளைகளின் தாயான வீரதிரசிங்கம் மீனலோஜினி (வயது 25) என்பவரே மரணமானவராவார்.

(உ-104)

கலாசார உத்தியோகத்தர் நியமனம்

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பிரதேச செயலகங்களுக்கு மேலும் 27 கலாசார உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளதாக மாகாண கலாசார அலுவல்கள் பண்பாட்டுத்துறை அமைச்சின் உதவிப் பணிப்பாளர் எஸ். எதிர்மன்ன சிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அண்மையில் 56 கலாசார உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டமைகுறிப்பிடத்தக்கது. (உ-9)

இராணுவத் தலைமையகத்திற்கு தேவையான வானொலிச் செய்தியை தடை செய்யும் உபகரணம்

கொள்வனவு ஒப்பந்தத்தில் பெரும் மோசடி

31 மில்லியன் ரூபாவை மீளப்பெற மகீரத முயற்சி

[கொழும்பு]

வானொலி மூலம் அனுப்பப்படும் செய்திகளைத் தடை செய்ய உதவும் உபகரணத் தொகுதியைக் கொள்வனவு செய்ய வழங்கப்பட்ட 31 மில்லியன் ரூபாய் பணத்தை திரும்பப்பெறும் முயற்சியில் இலங்கை இராணுவம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது, மேற்படி உபகரணத்தைக் கொள்வனவு செய்யும் நோக்குடன் இராணுவத் தலைமையகம் கடந்த ஆண்டு அமெரிக்க நிறுவனமான 'றொக்பெல் கொலின்ஸ்' உடன் ஒப்பந்தமொன்றைச் செய்தது.

அத்துடன் அந்நிறுவனத்தின் ஒரு முகவரான என். ஆர் ஸ்ரத்திடம் 2000ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ந் திகதி முப்பத்தெட்டாயிரத்து இருநூற்று ஐம்பது அமெரிக்க டொலரை வழங்கியது.

ஏற்கனவேசெய்துகொண்ட ஒப்பந்தப்படி 15-12-2000 வரையில் உபகரணம் வந்து சேரவில்லை. இதற்கிடையில் காலநீடிப்பு வழங்க முடியாது. உடனடியாக உபகரத்தை வழங்க வேண்டுமென்று இராணுவத் தலைமையகம் வலியுறுத்தியது. இதனையடுத்து மேற்படி நிறுவனத்தின் விற்பனை முகாமைபாளர் நேரடியாக இலங்கை வந்ததுடன் தமக்கு மேற்படி உபகரணத்தை வழங்குவதற்கான உத்தரவே அல்லது முற்பணமோ இதுவரை கிடைக்கவில்லையெனத் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து 31 மில்லியன் ரூபாவை என்.ஆர் ஸ்ரம் நிறுவனத்திடமிருந்து திரும்பப் பெறுவதற்கு ஒத்துழைப்புத் தருமாறு இராணுவத்தலைமையகம்அமெரிக்கத் தூதுவரிடம் கோரியுள்ளது.

[ந]

கால் கோள் விழா

(கோப்பாய்)

உரும்பிராய் றோ.க.த.க பாடசாலையின் தரம் ஒன்று மாணவர்களின் கால் கோள் விழா அண்மையில் உப அதிபர் செல்வி தா. மேரி யோசராணியின் தலைமையில் நடைபெற்றது.

உரும்பிராய்ப்பகுதிபொதுச் சுகாதார பரிசோதகர் அ. ஜெயபாலன் பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். (உ-79)

பொங்கல் கவிதைப் போட்டி முடிந்த பின் வந்து சேர்ந்த கவிதைகளில் சிலவற்றினைத் தருகின்றோம்.

தைமகளே தமிழர்க்கு விடிவுதனைத் தாராயோ

சங்கமது வைத்துவளர்த்தெடுத்ததமிழ் மொழிக்கு
சங்கடங்கள் வரின் சங்கே நீமுழங்கு என்றார்
எங்கள் தமிழ் அன்னை படும் இடரின் ஈர்ப்பால்
இளமனங்கள் ஆற்றாமல் அழுதல் தீர்க்கப்
பொங்கு தமிழ் எழுச்சியிலோ ரணியிற் திரண்டார்
புரப்பவர்காய்ச் சாக்களமும் புகுந்தே காப்பார்
தங்கு தடை யேதுமின்றித் தரணியை யாளத்
தை மகளே தமிழருக்கு விடிவினைத் தாராயோ?

இளங்கவி
யாழ்ப்பாணம்.

★ ★ ★

தை மகள் பலதரம் வந்தாள
தமிழருக்கு (சமா) தானம் தர - ஆனால்
பொங்கிச் சரித்த
பொங்கல் பானையாய்
தமிழரின் (சமா) தானம் ...
தை மகளே
இம் முறையேனும்
தமிழருக்கு விடிவு தருவாயா ??

க.ஜெரோம் ஜெயதாஸ்
யாழ்ப்பாணம்.

★ ★ ★

இன்னல்கள் யாவும் நீங்கி
இனியவை நம்மைச் சூழ
அன்னம் ஆடை அணிகலன்
அகதி கட்கு ஈந்து
புன்னகை முகத்தில் தெரிய
புரிந்தே உதவிகள் பல
இடைமோடு ஏற்றி துதிப்போம்
இனிய நல் ஆதவனை இன்று

சாநாதன்
சங்கரத்தையூர்

★ ★ ★

பொய்மைகளோ பொல்லாத போர் நிலவும் சூழலிலே
வையகமோ வகையறியா வானகமும் வருந்திவிட
தையலரோ தரணியில் தரித்தசிறார் முதியோரும்
செய்யவுமே செயலாற்றுச் செத்துமொரு சொத்தற்று
பையவுமே பகலிரவாய்ப் படுதுயரில் பட்டழிந்து
உய்யவுமே உள்ளவயல் உழுபயிர்கள் அழிந்து பட
நையவுமே நல்லதனை நம்மினமே நாடவுடன்
தைமகளே தமிழர்க்கு விடிவுதனைத் தாராயோ

இராசதுரை வணிகலாதன்
புத்தூர்.

★ ★ ★

வீட்டினில் விடியலின்றிக் குழறும் குழந்தைகள்
தெருக் கோடியில்தொழிலின்றி சேர்ந்திருக்கும் மக்கள்
ஓயாத ஒழுக்குப் போல தீராத சண்டைகள்
தைமகளே தமிழர்க்கு விடிவுதனைத் தாராயோ!

சமாதானம் வருமென்று சனமெல்லாம் காத்திருக்க
சண்டைக் காரர் யுத்தத்தை முன்னெடுத்து செல்ல
சஞ்சலமடைந்த தரகர்கள் மலைத்து நிற்க
தைமகளே தமிழர்க்கு விடிவுதனைத் தாராயோ!

மு. கிருஷ்ணன்
மட்டுவில்.

★ ★ ★

தந்திடுவாய் தை மகளே விடிவுதனை
தரணியிலே தமிழர் குலம் தழைத்தோங்க
தவறி நிற்கும் தமிழர்தனை ஒன்று சேர்க்க
விடிவுதனை கொண்டு நீயும் வாராயோ

தாய்க் குலமே தலைகுனிந்து நிற்குதென்று
சூடு மாறி நீயும் அங்கு நின்றிடாதே!
விடிவுதனை தேடி நிற்கும் வீரத்தமிழர்க்கு
விடிவுதனை கொண்டு நீயும் வாராயோ.

என். கே. முகன்
அராலி - மேற்கு

இராசி பலன்

24. 01. 2001
(தை 11, புதன்)
அமாவாசை மாலை
6. 51 வரை
உத்தராடம் பி ப 5. 25 வரை
ராகுகாலம் 12. 36-2. 06
சுபநேரம் 5. 06-6 36
அமிர்தசித்தம், அமாவாசை விரதம்

மேடம்
தொழில் சிறப்பு, அதிகாரம், காரிய ஜெயம், பெரியோர் சந்திப்பு.

இடபம்
பிரயாணம், வயிற்றுக் கோளாறு, நிலைமாற்றம், கட்டுப்பாடு

மிதுனம்
நோய் ஏற்படல், பிரயாண பயம், எதிர்பாராத பிரச்சினை, முயற்சி தாமதம்.

கடகம்
போசன சுகம், கௌரவமான நிலை, காரியம் கைகூடும், சுவாரஸ்யம்.

சிங்கம்
காரிய அனுகூலம், பகைவர் விலகுவர், நோய் குணமடையும், புதிய முயற்சி

கன்னி
மனச்சஞ்சலம், ரோகம், காரியத் தடங்கல், தாழ்வு நிலை.

துலாம்
தேவையற்ற கலகம், தன்னம்பிக்கைக்குறைவு, காரிய தாமதம், நிலைக்கேடு.

விருச்சிகம்
காரியநன்மை, பிரயாணம், தனவரவு, உறவினர் உதவி.

தனுசு
வீண் விவாதம், பொருள் விரயம், மதிப்புக்குறைவு, முயற்சி மந்தம்.

மகரம்
ஆழ்ந்த சிந்தை, கௌரவம், போசன சுகம், காரிய சித்தி.

கும்பம்
கோபப்படுதல், அலைச்சல், பிரயாணம், காரிய தாமதம்.

மீனம்
நன்மையான காரியம், பொருள் வரவு, சந்தோஷம். பிதாசிந்தை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

சங்கே முழங்கு

ஏழைகளுக்கு உதவுவது சமூகத்தின் கடமையே

இந்துசமூகத்தினர் ஆலயங்களை அமைத்தது வழிபாட்டுக்கே தவிர சமூக சேவைக்கு அல்ல. ஆலயம் என்பது இறைவன் குடிகொண்ட இடம். அங்கு மக்கள் சென்று தங்கள் கவலைகளை கூறி வழிபடும் ஒரு ஸ்தலம். ஆகையால் ஆலய நிர்வாகிகள் தான் ஏழைகளின் வறுமையை ஒழிக்க முன்வரவேண்டும் என்பது தவறான கருத்தாகும். சமூகம்தான் முன்வரவேண்டும் ஏனெனில் சமூகம் தான் ஆலயத்தை அமைத்தது சமூகத்தினர் தான் கிராமம் தோறும்வறுமை ஒழிப்புத் திட்டத்தைஉருவாக்கி அதில் ஏழைமக்களை காப்பாற்றவேண்டும். ஆலய நிர்வாகிகள் முதலில்ஆலய திருப்பணிகள்ஆகிய கோபுரம், தேர், தீர்த்தத்தடாகம், மஞ்சம், கைலாசவாகனம் போன்ற கடமைகளை செய்து முடிக்க வேண்டும். இதனால் இளம் சமூதாயத்திற்கு இவைகள் என்ன என்பதை அறிந்து கொள்ள முடியும். ஆலயத்தில் எவ்வித திருப்பணிக்கும் இடம் இல்லை என்பதை அறிந்த பின்புதான் ஆலய நிர்வாகிகள் ஆலயத்தின் பெயரில் சமூகப்பணியைச் செய்யலாம். இதற்கு உதாரணமாக திருப்பதி வெங்கடேசர் ஆலயம் அமைந்துள்ளது.

இங்கு சிலர் பெயருக்கும், புகழுக்குமாக சமூகப் பணியை செய்து வருகின்றார்களே தவிர, பரிசுத்த மான சமூகப்பணி அல்ல என்பதுமுற்றிலும் உண்மையான ஓர் விடயம்.

சுப்பிரமணியம் சிவராசா
நல்லூர்

மாணவரின் கல்வித்தர வீழ்ச்சிக்கு காரணம் தரப்படுத்தல் குறைபாடே

அறிக்கையில் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள ஆரம்பமற்றும் உயர்தர பாடசாலைகளில் கல்வித் தர வீழ்ச்சிக்கும் பெறுபேறுகளின் வீழ்ச்சிக்கும் அடித்தளமாக அமைவது அப்பாடசாலைகளில் மாணவர் வகுப்பு ரீதியாகப் பிரிக்கப்பட்ட முறைமையே என கடந்த வருட இறுதிப் பகுதியில் யாழ். மாவட்டத்திலுள்ள பதினைந்து பாடசாலைகளுக்கு விஜயம் செய்த மாகாண கல்வி அமைச்சைச் சார்ந்த உதவிக் கல்விப்பணிப்பாளர் ஒருவர் மாகாணக் கல்வி அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

இதில் யாழ். மாவட்டத்திலேயே ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையிலும் இணைப்பாட விதான செயற்பாட்டிலும்முன்னணியில் நிற்கின்ற ஒரு பாடசாலையும் யாழ்.கோட்டத்திலுள்ள தரம் பதின்மூன்று வரையுள்ள பாடசாலையும் அடங்கும் எனத் தெரியவருகின்றது.

இதேவேளை தமது மேற்பார்வை விஜயத்தின் போது அரைமணித்தியாலங்கள் மட்டுமே தமது பாடசாலையில் தங்கியிருந்த அதிகாரியின் கருத்து வருடம் பூராகவும் சுட்டிக்காட்டு

அப்பாடசாலையின் வளர்ச்சிக்காக தம்மை அர்ப்பணிக்கும் அதிபர்கட்கு வேதவலையைத் தரும் செய்தியாகவும் தமக்கு ஆழ்ந்த அதிர்ச்சியைத் தருவதாகவும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (உ-79)

அபிராமிப்பட்டர்
விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். கச்சேரி நல்லூர் வீதியிலமைந்துள்ள நாச்சியம்பாள் தேவஸ்தானத்தில் இன்று பி. ப. 3. 00 மணிக்கு அபிராமிப்பட்டர் விழா, விசேட அபிடேக ஆராதனைகளுடன் இடம்பெறவுள்ளது. (உ)

மாணவர் பொதுஅறை

(கந்தர்மடம்)

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் பொழுதுபோக்கினைக் கருத்திற் கொண்டு மாணவர் பொது அறை ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. (உ-37)

தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்

வினா இல. 01

ஆக்கம் : தி. மயூரன்

★ பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துள்ள சொல்லை எழுதுக

1) நிலவு
2) குருதி
3) நெருப்பு
4) சந்தோசம்
5) மேகம்

★ பின்வரும் சொல் வரிசையில் பொருந்தாத சொல்லை தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.

6) மகன், மருமகன், பேரன், மகள்
7) காகம், புறா, குயில், மான்
8) மேகம், நிலம், கல், மண்
9) அன்பு, கருணை, கோபம், சாந்தம்
10) மின்சுமிழ், பேனா, மெழுகுதிரி, விளக்கு

★ கீழ் தரப்படும் தகவலை வைத்து அதன் கீழ் வரும் வினாக்களுக்கு விடை எழுதுக?

FATHER - MACHEL
MOTHER - MARY
DAUGHTER - DARLY

11) மகளின் பெயர் என்ன?——————
12) தாயின் பெயரை தமிழில் எழுதுக?——————
13) மகள் தன் பெயருக்கு முன் இட வேண்டிய எழுத்து என்ன?——————
14) மழைக்காலம் ஒன்றின் அறிகுறி ஆவது
1) வெக்கையாக இருக்கும்
2) வெய்யில் கடுமையாக இருக்கும்
3) வானத்தில் கருமேகங்கள் காணப்படும்
4) நிலவு பிரகாசமாகத் தெரியும்
15) வடக்கு நோக்கி திற்கும் ஒருவரின் வலது கை எந்தத் திசையில் இருக்கும்?—————— ——————

★ பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.

16) சிகிரியா குகையுள் இருப்பது
(1) இரத்தினக்கற்கள் (2) ஓவியங்கள்
(3) சிங்கங்கள்
17) உலக அதிசயம் ஆவது
(1) நைல்நதி (2) சிவனொளி பாத மலை
3) தாஜ்மகால்
18) இறுதியாக ஒலிம்பிக் நடந்த ஆண்டு
(1) 1996 (2) 2000 (3) 1999
19) இந்தியாவின் ஜனாதிபதி
(1) கே.ஆர். நாராயணன் (2) வாஜ்பேய்
(3) கருணாநிதி

★ பின்வரும் வசனங்களில் தடித்த சொல்லை திருத்தி அமைத்து அவ் வசனத்தை மீண்டும் எழுதுக.

20) அண்மையில் யாழ்ப்பாணத்தில் **அடமழை** பெய்தது
——————————
21) இடம்பெயர்ந்த மக்கள் **உடமைகளை** இழந்து தவித்தனர் ——————————
22) அந்த வீட்டின் **தாவாரம்** வழியாக மழைநீர் வீட்டினுள் சென்றது ——————————
23) விமானம் ஒன்று 18.20 மணிக்கு புறப்பட்டது. விமானம் போய் சேர 3.10 மணியாகி விட்டது; பயணத்திற்காக செலவழித்த நேரம் என்ன?——————
24) **ஈதயல்** காரர் 36m நீளமான துணியை இரண்டு துண்டுகளாகவெட்டுகிறார். ஒரு துண்டு மற்றையதைப் போல் இரு மடங்கு நீளமானது. நீளம் குறைந்த துண்டின் நீளம் யாது?——————
25) ஒரு மனிதன் ஒரு மணித்தியாலத்தில் 6km நடப்பான் ஆயின் 10 நிமிடத்தில் எவ்வளவு தூரம் நடப்பான்?
——————

★ 'நான் கண்ட கனவு' என்ற தலைப்பில் 5 வசனங்கள் எழுதுக. ஒரு வசனத்தில் குறைந்தது 4 சொற்களேனும் இருத்தல் அவசியம்.

26) ——————
27) ——————
28) ——————
29) ——————
30) ——————

குறிப்பு:-
இதற்கான விடைகளை 31-01-2001 இற்கு முன் எமக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

வடக்கு- கிழக்கில்

எழுதுவினைஞர்சிற்றூழியர் நியமனம்

நிறுத்துமாறு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் அண்மையில் வழங்கப்பட்ட எழுதுவினைஞர் மற்றும் சிற்றூழியர் நியமனங்களை உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அண்மையில் வழங்கப்பட்ட எழுதுவினைஞர், சிற்றூழியர் நியமனங்களில் மோசடி நிகழ்ந்திருப்பது குறித்து அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஜனாதிபதியின் கவனத்தின் கீழ் கொண்டு வந்ததையடுத்தே இவ் இடை நிறுத்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நியமனத்தில் தகைமை இல்லாதவர்களுக்கு எழுதுவினைஞர் பதவிகளும் தகைமை உள்ளவர்களுக்கு சிற்றூழியர் பதவிகளும் வழங்கப்பட்டதுடன் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றாதவர்களுக்குகூட நியமனம் வழங்கப்பட்டிருப்பது குறித்து அமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-9)

வலி கிழக்கில்

கட்டாக்காலி நாய்கள் ஒழிப்பு தீவிரம்

(ஆவரங்கால்)

வலிகிழக்குப்பிரதேசசபைக் குட்பட்ட பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்கள் ஒழிப்புப் பணி மிகவும் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த வகையில் வலி கிழக்கு பிரதேசசபை ஊழியர்களும் நீர்வேலிப் பிரதேச சுகாதார உத்தியோகத்தரும் இணைந்து கடந்த புதனன்று பல கட்டாக்காலி நாய்களை அழித்திருப்பதாக தெரியவந்துள்ளது.

கட்டாக்காலி நாய்களால் பொதுமக்கள் தாம் அனுபவித்துவரும் இடையூறுகள் குறித்து பல முறை சுட்டிக் காட்டியதற்கிணங்க மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டமை குறிப்பிடத்தக்கது

இதேவேளை, கட்டாக்காலி நாய்கள் ஒழிப்பின் இரண்டாம் கட்டப்பணிகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளதாய் பிரதேசசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-57)

நுளம்பின் உறைவிடமாகும் திருத்தப்படாத வீதி

(ஈச்சமோட்டை)

மிக நீண்டகாலமாக படுமோசமாக பாதிப்புக்குள்ளாகிப் போக்குவரத்துக்கு தகுந்ததாயில்லாதுயாழ்ப்பாணம் இராசேந்திரா வீதியாணப்படுகிறது.

இவ் வீதியினருகே சழிவு நீர் வழிந்து செல்லும் வாய்க்கால்களும் சேதமடைந்த நிலையில் உள்ளன.

இதனால் நுளம்புப் பெருக்கமும் தொற்றுநோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இதனை திருத்துவதற்காக கடந்தகாலத்தில் நிதி ஒதுக்கப்பட்டபோதிலும் இது வரை திருத்தம் எதுவும் மேற்கொள்ளப் படவில்லை எனத்தெரிவிக்கப்படுகின்றது. (உ-59)

ச. செ. ச. பார்வை

(வவுனியா)

கடந்த ஆண்டு மட்டக்களப்பில் படையினரால் கைது செய்யப்பட்டு முகாம்களிலும், சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள 401 பேரை தாம் பார்வையிட்டதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது. (உ-5)

சந்திரிகா படமும், புலிச்சின்னமும்பொறித்த நாட்காட்டி கொழும்பில்

(கொழும்பு)

ஜனாதிபதியின் உருவப் படமும் விடுதலைப் புலிகள் இயக்க சின்னமும் பொறிக்கப்பட்ட கையடக்க நாட்காட்டி ஒன்று கொழும்பில் வெளியிடப்பட்டுள்ளதாய் தெரியவந்துள்ளது

ஒரு பக்கத்தில் புலிச்சின்னமும் மறுபக்கத்தில் ஜனாதிபதி சந்திரிகாவின் உருவமும் பொறிக்கப்பட்ட மேற்படி நாட்காட்டியில்,

ஜனவரி முதல் ஜூன்வரையான நாட்காட்டிப் பக்கத்தில் ஜனாதிபதியின் படமும்,

ஜூலையில் இருந்து டிசம்பர் வரையான நாட்காட்டிப் பக்கத்தில்புலிச் சின்னமும் பொறிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கடந்த பாராளுமன்ற அமர்வின் போது எதிர்க்கட்சியினரால் பெரும் சர்ச்சை எழுப்பப்பட்டுள்ளது; (உ-9)

மேற்கு நாட்டுத்தூதுவர்களுடன் ஜனாதிபதி நீண்ட நேரச் சந்திப்பு

இல.நிலைதொடர்பாக விளக்கப்பட்டதாம்

(கொழும்பு)

மேற்கு நாடுகளின் தூதுவர்களை சந்தித்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நீண்ட நேரம் உரையாடியிருப்பதாகமேற்கு நாட்டு தூதரக வட்டாரம் தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த திங்களன்று இடம் பெற்ற இச் சந்திப்பின் போது பிரிட்டன், நோர்வே, அவுஸ்திரேலியா உட்பட மேற்கு நாடுகளின் தூதர்கள் பலர் பிரசன்னமாகியிருந்தனர்.

அரசாங்கத்தின் தற்போதைய நிலைப்பாட்டையும் செயற்பாடுகளையும் விளக்குவதுடன், மிகவிரைவில் ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றக்குழு இலங்கை வரவுள்ளதால் அது தொடர்பாகவும் ஆராயப்பட்டிருக்கலாம் என மேற்படி சந்திப்பு குறித்து அரசியல் வட்டாரங்கள் ஊகம் வெளியிட்டுள்ளன.

இதேசமயம், விரைவில் இலங்கை வரவுள்ள ஐரோப்பிய ஒன்றிய குழுவினர் அரசியல் பிரமுகர்களைச் சந்தித்து வடக்கு-கிழக்கின் இன்றைய நிலைமைகள் தொடர்பாக ஆராயவிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-9)

கல்விப் பகுதி
வினா இல: 01

"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்; .....

சொந்த முகவரி; .....

கற்கும் பாடசாலை : .....

மாணவர் கையொப்பம் ; .....

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்

பரிசளிப்பு விழா

(மந்திகை)

தொண்டைமானாறு கெரிடாவில் அம்பிகை சிக்கன கடனுதவிக் கூட்டுறவு சங்கத்தினரின் பாலர் பாடசாலை பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. (உ-23)

மாநகர சட்டி மன்றம் யாழ்ப்பாணம்

இன்று ஒரு தகவல்

பழிக்குப் பழி வேண்டாம்

எங்கள் ஊர்ப்பக்கத்திலே ஒரு பெரியவர். அவர் வள்ளலார் பக்தர் கொலைஎன்கிற வார்த்தையைக் கூட தன் வாயாலே உச்சரிக்கமாட்டார். ஒரு தடவை, ஏதோ ஒரு ஊரில் நடந்த கொலையைப்பற்றிப் பத்திரிகையில் படித்துவிட்டுஅவரிடம் சொல்லிக் கொண்டிருந்தேன்.

அப்போது அவர் ''தம்பி நமது ஊர்ப்பக்கத்தில் கூட நீ இப்போது சொல்லிக் கொண்டிருந்தாயே அது நடந்து விடும் போலிருந்தது'' என்றார். அதுமாதிரி அவர் அந்த வார்த்தையை உச்சரிக்கிறதே பாவம் என்று நினைத்தார். அப்படிப்பட்டவர்களும் ஆங்காங்கே இருக்கத்தான் செய்கிறார்கள்.

இந்தக்காலத்துப்பையனிடம் போய் 'டேய் தம்பி! ஒருகன்னத்திலே அடித்தால், மறு கன்னத்தையும் காட்டுதல் வேண்டும்' என்றுசொன்னால் ''போங்கள் ஐயா! இன்னொரு கன்னத்திலேயும் நான் அடி வாங்கிக்கொள்வதில் உங்களுக்கு ஏன் அவ்வளவு ஆசை'' என்கிறான். பெரியவர்களெல்லாம் எதற்காக அப்படிச் சொல்லி வைத்தார்கள் என்று கூடப் புரிந்து கொள்ள முடியாத அளவுக்குப் போய் விட்டது. நாலடியாரில் ஒரு பாட்டு ''பெரியவர்களைப் பார்த்து, சிறியவர்கள் ஏதாவது தவறாகப் பேசி விட்டால்கூட, அதற்காக அவர்கள் திருப்பித் தப்பாகப் பேசிவிடமாட்டார்களாம் கீழ் மக்களுககு எதிராக மேன்மக்கள்ஒருபோதும் தாழ்வான சொற்களைப் பேசமாட்டார்களென்று சொல்கிறது.

ஒரு நாய் நம்மைக் கடித்து விடுகிறது என்றால், அதற்க க பதிலுக்குஅந்த நாயைத் திருப்பிக் கடிக்கிற மனிதர்கள் உண்டா? என்றும் அந்தப் பாடல் கேட்கிறது.

''கூர்த்து நாய் கௌவிக் கொள்ளகண்டும் தம்வாயால்
பேர்த்து நாய் கௌவினார்
ஈங்கில்லை - நீர்த்தன்றி
கீழ் மக்கள் கீழாய சொல்
லியக்கால் சொல்பவோ
மேன் மக்கள் தம்வாயால்
மீட்டு''

இதுதான் அந்த நாலடியார் பாடல் அதனாலே 'பழிக்குப்பழி, இரத்தத்துக்கு இரத்தம்'' என்பதெல்லாம் நமக்கு வேண்டாம். நாளைய தலைமுறைக்கு வேண்டாம்

''அதோ அந்த ஆள் என்ன செய்து கொண்டிருக்கிறார்'' என்று ஒருத்தர் கேட்டார். அதற்கு இன்னொருவர் ''ஒன்றுமில்லை! செருப்பு அவரது காலைக்கடித்துவிட்டதாம். அதனால் பழிக்குப்பழி வாங்குகிறேன் என்று சொல்லிக் கொண்டு, செருப்பைத் திருப்பிக் கடித்துக் கொண்டிருக்கிறார்'' என்று சொன்னாராம்.

இந்தக் காலத்தில் இப்படி நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

புலிகளுடன்யார் பேச்சு நடத்தினாலும் யுத்தத்தை தீவிரப்படுத்துவோம்

பிரதமர் ரட்ணசிறி சூளுரை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கொலைப் பட்டியலில் எனது பெயரும் உள்ளதாக அறிகிறேன். யார் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினாலும், நாம் யுத்தத்தை தொடர்ந்து நடத்துவோம் என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா ஹொறணையில் நடைபெற்ற கூட்டமொன்றில் சூளுரைத்துள்ளார்.

ஹொறணையில் நடைபெற்ற படையினரின் குடும்பங்களுக்கு உதவி வழங்கும் வைபவமொன்றில் பிரதமர் உரையாற்றினார்.

அங்கு பிரதமர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

விடுதலைப்புலிகளுக்கு எதிராக முன்னெடுத்துச் செல்லப்படும் யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்கு இளைஞர்கள் இராணுவத்தில் சேர முன்வர வேண்டும்.

இராணுவ தில் சேரும் இளைஞர்கள் மூன்று வருடத்திற்கு மட்டும் யுத்தத்தில் ஈடுபட்டால் போதுமெனவும், பின்னர் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அவ் இளைஞர்கள் ஈடுபடுத்தப்படுவர் எனவும்.

நாடு பூராகவும் சுமார் 10 ஆயிரம் பேரை வீடு வீடாகச் சென்று இராணுவத்திற்கு ஆட்களைத் திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை, எதிர்க்கட்சியினர் நாட்டின் சூழ் நிலை பற்றி தெரியாமல் விலைவாசி ஏற்றத்தைக் கண்டித்து பாதயாத்திரை மேற்கொண்டு வருவதையும் பிரதமர் குறை கூறினார். (வ)

மலத்தியோன் விசிறல்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் மலத்தியோன் தெளிக்கப்பட்டு இருக்கிறது.

அந்தவகையில் அண்மையில் மெலிஞ்சிமுனை, தம்பாட்டி கிராமங்களில் மலேரியா நோய் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் மலத்தியோன் விசிறப்பட்டது.

தீவுப்பகுதியில், ஏனைய பகுதியிலும் மலேரியா நோய் பரவும் வாய்ப்பு இருக்கும் என கண்டறியும் பட்சத்தில் அப்பகுதியிலும் மலத்தியோன் விசிற நடவடிக்கை எடுக்கப்படும் என ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனைப்பொறுப்பதிகாரி ச. திவ்வியகுமாரன் தெரிவித்தார்.

(உ- 75)

உதை பந்தாட்டப் போட்டி ஹாட்லிக் கல்லூரி வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட கல்வி வலயங்களுக்கிடையிலான உதை பந்தாட்டப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி இரு அணிகளிலும் வெற்றி பெற்றுள்ளது.

16 வயது பிரிவுப் போட்டியில் தெலலிப்பழை யூனியன் கல்லூரியை 3;0 என்ற கோல வீதத்திலும், 18வயது பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை 2:0 என்ற கோல் வீதத்திலும் வெற்றி பெற்றுள்ளது.

இவ் இரு உதைபந்தாட்டப் போட்டிகளும் சுன்னாகம் சந்தரோடை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. (வ)

கட்டணஉயர்வுடன்

சிற்றிஒவ்றிங்கோ மீண்டும் 29ம் திகதிமுதல் சேவையில்

(திருமலை)

திருமலைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையிலான 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல் சேவை இம்மாதம் 29 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் ஈடுபடவுள்ளதாக கப்பல் கம்பனி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வழித்துணையுடன் சேவையில் ஈடுபடவுள்ள இக் கப்பலுக்கான கட்டணம் 1575 ரூபா எனவும், ஜி.எஸ்.ரி. வரியான 175ரூபாவையும் உள்ளடக்கியதாக இருக்கும் எனவும் கப்பல் நிர்வாகம் அறிவித்துள்ளது.

எதிர் வரும் 29 ஆம் திகதி முதல் திங்கள், புதன் ஆகிய இரு தினங்களில் திருமலையில் இருந்தும் செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் காங்கேசன் துறையில் இருந்தும் இக் கப்பல் சேவையில் ஈடுபடுமென கப்பல் கம்பனி வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இதேவேளை, இக் கப்பல் சேவைக்கான ஆசனப்பதிவுகள் 25 ஆம் திகதி முதல் 'ரான்' அலுவலகத்தில் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

ஊர்காவற்றுறை பாடசாலைகளில்

ஆசிரியர் பற்றாக்குறை மாணவர்கள் பின்னடைவு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை நகரப் பகுதி பாடசாலைகளில் தொடர்ந்தும் ஆசிரியர் பற்றாக்குறைநிலவி வருகின்றது.

யா/புனித அந்தோனியார் கல்லூரி, சிறிய புஸ்பமகளிர் வித்தியாலயம், யா/புனிதமரியாள் வித்தியாலயம், யா/கரம்பொன் சண்முகநாதன் மகாவித்தியாலயம் ஆகியவற்றிலேயே இவ்வாறு 20 வரையான ஆசிரியர் வெற்றிடங்கள் நீண்ட காலமாய் நிரப்பப்படாது இருந்து வருகிறது.

இதேவேளை, இவ் வருட தொடக்கத்தில் வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் நியமிக்கப்பட்ட பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் நியமனம் மேற்குறித்த எந்தவொருபாடசாலைக்கும்வழங்கப்படாமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தொடர்ந்தும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுமானால், மாணவர் கல்வித்தரம் மேலும் மேலும் வீழ்ச்சியடையும் என பல தரப்பினராலும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-75)

ஒளிநாடா வெளியீடு

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த கிராமஅலுவலர்கள் தயாரித்து நடித்த 'வெளிநாட்டு மாப்பிள்ளை' என்னும் நகைச்சுவை நாடகத்தின் வீடியோ ஒளி நாடா வெளியீட்டு விழா கடந்த 12 ஆந்திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

பிரதேச செயலர் நா.வேதநாயகன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் கலந்து கொண்டு பிரதியை வெளியிட்டு வைத்தார்.

வரவேற்புரையை சமூக சேவை உத்தியோகத்தர் அ. அமிர்தலிங்கமும் வாழ்த்துரையை இளைப்பாறிய சங்கானை பிரதேச செயலர் கா. சந்திரராசாவும், மதிப்பீட்டுரையை இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி ஆசிரியர் ஓ ஆர். விஜயகுமாரும். சமாதான நீதவான் புத்தொளி ந. சிவபாதமும் நிகழ்த்தினார்கள்.

(உ-120)

போரூட் நிறுவனம்

பாடசாலை, சமூக மட்ட திட்டங்கள் முன்னெடுப்பு

போரூட் நிறுவனம், கடந்த வருடம் கரவெட்டி பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுகளில் பாலர் பாடசாலை, ஸ்தாபன அபிவிருத்தி, வங்கி அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, கிராமிய நூலகங்கள், சுகாதாரம், நல்லொழுக்கம், சுற்றாடல், வீடு, மலசலகூடம், நீர், நிவாரண வேலைகள் மற்றும் அரச பாடசாலை உதவி போன்ற திட்டங்களை அமுல்படுத்தியுள்ளதாக அந்நிறுவன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கிராமிய மக்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்தும் வகையில் இந்நிறுவனம் 22 கிராமங்களில் கிராமிய வங்கிகளை ஏற்படுத்தியுள்ளது.

அதே போல இந்நிறுவனத்தின் 22 திட்டக் கிராமங்களிலும் 22 கிராமிய நூலகங்கள் ஸ்தாபிக்கப்பட்டு பொது மக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

அத்துடன் வடமராட்சி பிரதேசத்திலுள்ள பிரதான நூலகங்களுக்கு நூற்றுக் கணக்கான நூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

மேலும் அரச பாடசாலைகளுக்கு உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் வடமராட்சி பிரதேசத்திலுள்ள கட்டைவேலி மெதடிஸ்த மிஷன் பாடசாலை, கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை, அல்வாய் வடக்கு அ.த.க. பாடசாலை, சென்தோமஸ் கத்தோலிக்க பெண்கள் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கட்டடங்கள் கூரை ஆகியன அமைக்கப்பட்டுள்ளது,

நீர் விநியோகத் திட்டத்தின் கீழ் போரூட் அமைப்பினால் 13 கிராமங்களில் 75கிணறுகள் துரிதகதியில்துப்பரவுசெய்துமுடிக்கப்பட்டன;

சுற்றாடல் அபிவிருத்திதிட்டத்தின் அடிப்படையில் பத்துக் கிராமங்களில் மொத்தம் 175 மரங்கள் நாட்டப்பட்டுள்ளன எனவும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

(உ-77)

இணுவில் பதியில்

மாட்டிறைச்சிக் கடை பொது மக்கள் எதிர்ப்பு

(ஊர்காவற்றுறை)

இணுவில் சந்தியில் மாட்டிறைச்சிக்கடை அண்மையில் அமைக்கப்பட்டமைக்கு பொதுமக்கள தரப்பில் மிகுந்த எதிர்ப்பு எழுந்துள்ளது.

விவசாயக் கிராமமாகிய இணுவில் பகுதியில் கடந்த காலங்களில் ஒருபோதும் மாட்டிறைச்சிக்கடை அமைக்க அனுமதி வழங்கப்படாதபோதிலும், தற்போது உடுவில் பிரதேசசபை அதற்கு அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி மாட்டிறைச்சிக் கடை இவ்வருட ஆரம்பத்தில் திறக்கப்பட்ட போதிலும், அதனை விரைவில் மூடுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக இணுவில் விவசாய சம்மேளனத்தினர் தெரிவித்துள்ளனர். (உ-75)

இலங்கைக்கு

கடத்திவரப்பட்ட 31 கிலோ போதைப்பொருள் பறிமுதல்

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலைய சுங்க அதிகாரிகளினால் 31 கிலோ கிராம் எடை கொண்ட ஹெரோயின் போதைப் பொருள் கடந்தவருடத்தில் மாத்திரம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன் பெறுமதி 5 கோடி ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளதாய் சுங்க கட்டளைச் சட்டப் பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான கடத்தல் வேலைகளில் ஈடுபட்டார்கள் என அடையாளம் காணப்பட்ட 15பேர் கைது செய்யப்பட்டதாகவும் இவர்களில் அனேகமானவர்கள் பாகிஸ்தான் மற்றும் இந்திய நாட்டைச்சேர்ந்தவர்கள் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

போர்க் கப்பல்கள் இரண்டினை இந்தியா அறிமுகம் செய்தது

(புதுடில்லி)

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட போர்க் கப்பல்கள் இரண்டு நேற்று வெள்ளோட்டம் விடப்பட்டுள்ளன.

இப் பிராந்தியத்தில் இந்தியா சமநிலை அடைவதற்காகவே படைபலத்தைப் பெருக்கும் நோக்கில் இவை உருவாக்கப்பட்டுள்ளன.

அந்த இரு கப்பல்களிலும் உள்ள ஆயுதங்கள் பெரும்பாலும் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்டவையாகவும் உக்கிரேனில் தயாரிக்கப்பட்டவையாகவும் இருக்கின்றன.

6 ஆயிரத்து 700 தொன் எடை கொண்ட நாசகாரிகள் இந்தக் கப்பல்களில் இருக்கின்றன.

இதேவேளை, இந்தியாவிடம் நூற்றி முப்பத்தொன்பது போர்க் கப்பல்கள் இருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

ஜப்பானிய பொருளியல் அமைச்சர் தாமாகப் பதவி விலகினார்

(டோக்கியோ)

ஜப்பானியப் பொருளியல் அமைச்சர் பொக்குமிமா நொக்காக்கா பதவி விலகியிருக்கிறார்.

பிரதமர் ஜெசீரோமோரி இந்த அமைச்சர் மேல் நம்பிக்கையில்லாது விலக்க எண்ணிய வேளையிலே பொருளியல் அமைச்சர் நொக்காக்கா தானே முன்வந்து பதவி விலகல் கடிதத்தைக் கொடுத்துள்ளார்.

இந்த அமைச்சர் ஜப்பானிலுள்ள காப்புறுதி நிறுவனமான கே எஸ் பி. யிடமிருந்து நூறாயிரம் டொலருக்கு மேல் இலஞ்சமாகப் பெற்றுக் கொண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் நொக்காக்கா அமைச்சரவையில் சேர்ந்து பத்து மாதங்கள் தான் ஆகின்றன. இவரின்இடத்திற்குமுன்னாள் அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பிலிப்பைன்ஸில்

முஸ்லிம்களுடனும் கம்யூனிஸ்களுடனும் அதிபர் பேச்சு வார்த்தைக்கு பணிப்பு

(மணிலா)

பிலிப்பைன்ஸ் அதிபர் அறாயோ, கம்யூனிஸ்ட் கிளர்ச்சியாளர்களுடனும் முஸ்லிம் பிரிவினை வாதிகளுடனும்உடனேஅமைதிப் பேச்சினை நடத்தும் படிகட்டளையிட்டிருக்கிறார்.

இந்தப் பொறுப்பினை உடன் தொடருமாறு புதிதாக நிருவாகப் பொறுப்பேற்றிருக்கும் றெனாட்டோ றிகுலாவுக்கு ஆணை பிறப்பித்துள்ளார்.

ஏற்கனவே அதிபர் எஸ்ராடாவின் ஆட்சிக் காலத்தில் அடிக்கடிநாட்டில் வன்செயல்கள் நடப்பதற்கு காரணமாயிருந்தவர்கள் என்று கணிக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியினரையும் முஸ்லிம் பிரிவினை வாதிகளையும் சாந்தப் படுத்தும் நோக்குடனும் அவர்களின் பிரச்சினைகளை உள்வாங்கும் நோக்குடனும் புதிய அதிபர்அறாயோ இந்த சமாதான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். (து)

பிலிப்பைன்ஸில்

தற்காலிகமாக பதவி விலகினேன் முன்னாள் அதிபர் எஸ்ராடா

(மணிலா)

தற்காலிகமாகப் பதவியிலிருந்து விலகி இருப்பதாகவும் தான் வரும் வரை உப ஜனாதிபதியிடம் பதவியை கொடுத்திருப்பதாக பிலிப்பைன்ஸ் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷிய செனட் சபைக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதிலிருந்து அறாயோவிற்கு தற்காலிக பதவிதான் கொடுக்கப்பட்டிருப்பதாக அரச குறிப்பு ஒன்று சுட்டிக் காட்டுகிறது.

இதற்கிடையில் பிலிப்பைன்ஸ் அரசுதரப்பு வழக்கறிஞர்கள் எஸ்ராடா மீது வழக்கினைத் தொடர்ந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. [து]

சீன மக்கள் மற்றைய சமூகங்களை மதித்து நடக்க வேண்டும்

சிங்கப்பூர் பிரதமரின் செய்தி

(சிங்கப்பூர்)

சீனர்கள் சிங்கப்பூரின் ஆகப் பெரிய சமூகத்தினர் என்றதன் பேரில் மற்றைய சமூகங்களையும் தங்களது விழாக்களிலும் கொண்டாட்டங்களிலும் கலந்து கொள்ளச் செய்ய வேண்டும் என்றார் சிங்கப்பூர் பிரதமர்.

பிரதமர் மேலும் தொடர்கையில்மற்றைய சமூகங்களை ஓரங்கட்டாது, ஒதுக்காது, புறக்கணிக்காது சீனர்கள் நடந்து கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டார்.

சீனப் புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிடும் பொழுது சிங்கப்பூர் பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அச் செய்தியில் மேலும் குறிப்பிடுகையில் சீனர்கள் மற்ற சமூகங்களுக்கு முன் மாதிரியாக நடந்து கொள்வதால் சிங்கப்பூர்வாழ் ஏனையசமூகத்தவர்களும் தங்கள் தங்கள் விழாக்களிலும் கொண்டாட்டங்களிலும் சீன மக்களை அழைப்பார்கள் என்று தெரிவித்தார். (து)

கேள்விகளுக்கு பதில் சொல்ல மறுத்த இந்தோ. அதிபர் ரகுமான் வாஹிட்

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய அதிபர் அப்துல் ரகுமான் வாஹிட், நிதி ஊழல் சம்பந்தமாகக் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்க மறுத்து விட்டார்.

அப்துல் ரகுமான் வாஹிட் நிதி சம்பந்தமான ஊழல்களில் அகப்பட்டிருந்தமை குறித்து பாராளுமன்றம் விசாரிக்க இருந்ததும் இது தொடர்பான கேள்விகளை வீட்டில்வந்து கேட்டால் சொல்வேன் என்று அதிபர் கூறியிருந்ததும் அறிந்த விடயமே.

பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிபர் வீட்டிற்குச் சென்று சில விளக்கங்கள்கேட்டபோதே வாஹிட் பதில்கூற மறுத்தார்.

இதுதொடர்பாக இந்தோனேஷிய அதிபர் வாஹிட்டுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (து)

கொங்கோ அமைதி காக்க அயல்நாட்டுராணுவஉதவி

[கின்ஸாசா]

கொங்கோவில் அமைதி நிலவி ஜனநாயக ஆட்சி வரும் வரை இராணுவ உதவி வழங்கப் போவதாக லிம்பாபே, அங்கோலா நாமீபியா போன்ற நாடுகள் அறிவித்துள்ளன.

அண்மையில் அங்கோலாவின் தலை நகரில் நடந்த இந்நாட்டு அதிபர்களின் மகா நாட்டில் இதற்கான உறுதி மொழி அளிக்கப்பட்டது.

கொங்கோவின் அதிபர் சுடப்பட்டதன் பின் அந்நாட்டில் பதட்டம் ஏற்பட்டுள்ளது. கொங்கோ இராணுவத்தில் உட்பூசல்கள் இருக்கின்றன.

இதேவேளை, கொங்கோவில் உள்ள அமெரிக்கக் குடிமக்களை உடனடியாக வெளியேறும் படி அமெரிக்கா கேட்டுள்ளது. (து)

ஆறாயிரம் கிலோ எடை சுமக்கும் பள்ளிப் பிள்ளைகள்

(புதுடில்லி)

பள்ளிக்குச் செல்லும் குழந்தை யொன்று ஓர் ஆண்டிற்கு ஆறாயிரம் கிலோ புத்தகங்களைச் சுமப்பதாகவும் இந்த எடை ஒரு லொறியின் எடைக்கு சமனாகுமென அறிவியல் மையத்தின் ஆய்வு கூறுகின்றது. (து)

செய்திப்பரல்

★ உலகிலேயே வாழ்க்கைச் செலவு மிகவும் உயர்ந்த நகரமாக ஜப்பானின் தலை நகர் டோக்கியோவும் குறைந்த இடமாகஈரான்தலைநகர் தெஹ்ரானும் தெரிவாகியுள்ளன.

★ ரஷ்யா தனது 'மிர்' விண்வெளி நிலையத்தினைத் தகர்த்து பசுபிக் சமுத்திரத்தில் வீழ்த்துவதற்கு ரொக்கெட் ஒன்றை அனுப்பியுள்ளது.

★ வைரக்கல் வர்த்தகம் தொடர்பாக இந்தியாவும் ரஷ்யாவும் அடுத்த மாதம்முடிவுகளை வெளியிடும்.

கொயிராலா மீண்டும் கட்சித் தலைவரானார்

நேபாள ஆளும் காங்கிரஸ் கட்சியின் தலைவராக பிரதமரான ஹிரிசாத்கொயிராலா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சுற்றுலா இடமான கொக்குறாவில் கூடிய கட்சிமகா நாட்டில் மீண்டும் கொயிராலாதேர்ந்தெடுக்கப்பட்டார்.

கொயிராலா மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்த வரும் முன்னாள் பிரதமருமான சேர்பகதூர் ஜீவா இவரை எதிர்த்து தலைவர் பதவிக்குப் போட்டியிட்டார்.

பகதூரை கொயிராலா அதிகப் படியான வாக்குகள் வித்தியாசத்தில் வென்றுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (து)

உலக தரிசன அறிவுப் போட்டி இல. 6

முழுப் பெயர்; .....

முகவரி; .....

.....

பிறந்த திகதி: ————————

போட்டியாளர் கையொப்பம் ————————

————————————

பெற்ற புள்ளிகள்: ————————

உலக தரிசனப் போட்டிக்கான பரிசில்களை வழங்க இருப்பவர்கள்.

அண்ணா கோப்பிக் கடை

இல. 4, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

அன்றாட பாவனைக்கேற்ற அண்ணா கோப்பியின் தயாரிப்புக்களை இங்கே பெற்றுக் கொள்ளலாம்.

நோர்வேயின் விசேட தூதுவர் இலங்கை வரும் திட்டத்தில் மாற்றம்

(கொழும்பு)

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் இலங்கை வரும் திட்டத்தில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாக கொழும்பில் உள்ள நோர்வே தூதரகம் அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் உத்தியோக பூர்வயுத்த நிறுத்தஅறிவிப்புடன் ஓரிரு தினங்களில் கொழும்பு வந்து ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சுக்கள் நடத்துவார் எனவும்,

வரும் வழியில்இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்கை சந்தித்து பேசுவார் எனவும் நோர்வே இராஜ தந்திர வட்டாரங்கள் முன்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

தலைமை நூலகம்
மாகாண சபை மன்றம்
யாழ்ப்பாணம்

செய்வினை செய்வான் செயல் முறை அவ்வினை உள்ளறிவான் உள்ளம் கொளல்

குறள்

வலம்புரி

தூதரின் பொறுப்பு

இன்று நள்ளிரவு 12 மணியுடன் விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பு காலாவதியாகி விடும். அதன்பிறகு இலங்கை மண்ணில் பெரும்போர் நடக்கலாமென அஞ்சும் நிலையில் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திப்பதற்காக இலண்டன் விரைந்துள்ளார்.

இன்று நள்ளிரவுடன் யுத்தநிறுத்தம் முடிவுக்கு வந்து மீண்டும் போர் தொடங்கி விடுமென அஞ்சிய சமாதான விரும்பிகளுக்கு நோர்வேத் தூதுவரின் இலண்டன் விஜயம் ஆறுதல் அளிப்பதாகவுள்ளது.

இலண்டன் விரைந்துள்ள நோர்வேத் தூதுவர் எரிக்சோல் மேலும் ஒரு வாரத்துக்கு யுத்த நிறுத்தத்தை நீடிக்குமாறு அன்ரன் பாலசிங்கத்திடம் கோருவார் என்று தெரிய வருகிறது. விடுதலைப் புலிகள் ஒரு மாதகால புத்த நிறுத்தத்தை சமாதான நல்லெண்ணத்துடன் அறிவித்த போதும் அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எதையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

இது ஒருபுறமிருப்பினும் இனப் பிரச்சினைக்கான சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் விசேட தூதுவர் தான் முன்னெடுத்துள்ள சமாதான முயற்சிகளைக் கைவிட்டதாகவும் இல்லை.

இந்நிலையில் யுத்த நிறுத்தம் செய்த விடுதலைப் புலிகளுடன் அரசையும் இணைத்து யுத்தத்தை நிறுத்துவதே எதிர்கால சமாதான முயற்சிக்கு உதவுவதாக இருக்கும். மாறாக விடுதலைப் புலிகளால் அறிவிக்கப்பட்ட யுத்த நிறுத்தம் இன்று நள்ளிரவுடன் முடிவுக்கு வந்தால், அதன் பின் இருசாராரும் யுத்தகளத்தில் இறங்கினால், மீண்டும் இலங்கையில் யுத்தநிறுத்தம் என்பது எட்டாக்கனியாகவே யிருக்கும் அதன்பின் நோர்வேயின் முயற்சி பயனற்றதாகி விடும்.

எனவே புலிகளின் யுத்த நிறுத்த அவகாசத்தை நீடிப்பதுடன், அரசாங்கத்தையும் யுத்த நிறுத்தத்திற்குக்கொண்டு வருவதிலேயே நோர்வேயின் சமாதான முயற்சியின் ஆயுள் தங்கியுள்ளது.

பட்டருக்காக அமாவாசையில் முழு நிலவு தோன்ற வைத்த அபிராமியைப் பணிவோம்

இன்று தை மாத அமாவாசை தினம். இதுஅபிராமிப் பட்டர் விழாவாக அம்பிகை அடியார்களால் கொண்டாடப்படுகிறது.

திருக்கடவூர்

எம்பெருமாட்டி சிவகாம சுந்தரிக்கு தலங்கள் தோறும் பல்வேறு நாமங்களால்போற்றப்படும் பெருமை உண்டு. காஞ்சியில் காமாட்சி, மதுரையில் மீனாட்சி, தில்லையில் சிவகாமி என இவள் அழைக்கப்படுகிறாள். திருக்கடவூரிலே அபிராமி என்னும் நாமம் பெறுகிறாள். முன்னொரு காலத்திலே உயிர் கவர வந்த காலனை மார்க்கண்டேயருக்காக அரன் உதைத்து வீழ்த்திய பெருமை உடையதலம் திருக்கடவூர் ஆகும்.

பட்டரின் பக்தி

தஞ்சையிலே சரபோஜி மன்னன் ஆட்சிக்காலத்திலே வாழ்ந்த அபிராமிப்பட்டர் தியானத்தில் மூழ்குதல், விழித்தல் ஆகிய பெருநிலையினை உடையவர். இவரது வழிபாட்டை பித்தென்று கருதிய சிலரும் கடவூரில் இருந்தனர் சுவாமி தரிசனத்தின் பொருட்டு மன்னன் சரபோஜி ஆலயத்துக்கு வருகிறான். தியானத்தில் அமர்ந்திருந்த அபிராமிப்பட்டர் அரசனைக் கவனிக்கவில்லை. தன்னை அவர் அவமதிப்பதாக கருதிய அரசன் அவர் அருகில் சென்று 'இன்று என்னதிதி?' என வினவுகிறான்.

சி. ஜெயகணேஷன்
ஆசிரியர்

அம்பிகையின் சோதனை

அம்பிகையின் அருள் ஒளியை முழுநிலவாக அனுபவித்துக் கொண்டு இருந்த பட்டர் 'இன்று பௌர்ணமி' என்று பதிலளித்து விடுகிறார். அரசன் திடுக்கிட்டான். அமாவாசை நாளான இன்று நிலவே தெரியாது. இவர் பௌர்ணமிஎன்றுகூறுகிறார். இவ்வாறு கூறித்தன்னை அவமானப்படுத்துகிறார் என்று எண்ணினான். பட்டர் தியானத்திலிருந்து எழுந்து அயலவர்கள் மூலம் விடயத்தைக் கேள்விப்படுகிறார்.

அருட்திறத்தால் ஆட்கொள்ளப்படல்

சோதனைகளைக்கொடுத்து அன்பர்களைச் சாதனையாளர்களாக்கும் அன்னை அபிராமிப்பட்டருக்கு அருள எண்ணினாள். அன்று மாலை நேரம் நெருப்பின் மேலே கட்டப்பட்ட பரணிலே நின்று அபிராமியின் அருளை அந்தாதியாகப் பாடுகிறார் பட்டர். 'விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு' என்னும் எழுபத்தொன்பதாவது பாடல் முடிய அபிராமி தரிசனமாகிறாள். தனது காதுகளிலே ஒளிவீசிய தோடுகளில் ஒன்றை எடுத்து இருண்ட வானில் வீசுகிறாள். அரசரும் ஊரில் உள்ளோரும் மறுத்த வரும் வெறுத்தவரும் காண முழு நிலா வானிலே ஒளிவீசியது. அன்றிரவு முழுவதும் பூரண நிலவாக அது ஒளிவீசியது.

மன்னனும் பணிந்தான்

பக்தியின் பெருமையை அறியாது பட்டரைத் தண்டிக்க எண்ணிய சரபோஜி மன்னன் அவரின் பாதங்களில் பணிந்து வணங்கினான். சாதாரண பித்தராக காணப்பட்ட 'பட்டர்' பெரும் பேறுபெற்ற பக்தர் ஆனார். அபிராமி அந்தாதி எமது கரங்களுக்கு நூறு பாடல்களாக கிடைத்துள்ளது. மன்னனாலும் மக்களாலும் கௌரவிக்கப்பட்ட அபிராமிப்பட்டர் நெடுங்காலம் வாழ்ந்து அபிராமி திருவடிகளை அடைந்தார்.

ஆத்தாளை, எங்கள் அபிராமவல்லியை அண்டமெல்லாம் பூத்தாளை, மாதுளம் பூ நிறத்தாளை, புவி அடங்கக் காத்தாளை, அங்குச பாசாங்குசமும் கரும்பும் அங்கை சேர்த்தாளை, முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு -தீங்கில்லையே

சதுரங்கப் போட்டியில் சளைக்காது ஆடிய 'ஆனந்' உலகப் புகழ்பெற்ற ஒரு இந்திய வீரர்

கப்டன் டீ.ஏ.எம்.குணசிங்கம்

ஈரான் தேசத்தில் தெஹ்ரான் (Tehran) என்ற இடத்தில் அண்மையில் நடந்து முடிந்த உலகக்கிண்ண சதுரங்க போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த விஸ்வநாத் ஆனந், அவரை எதிர்த்து ஆடிய ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த அலெக்ஸ்ஸிஸ்ரோவ் (Alexei Shirov) என்பவரை ஆறு சுற்றுகளைக் கொண்ட இறுதி ஆட்டத்தில் 3.5:05 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று தாய் நாட்டுக்கு பேரும் புகழும் பெற்று தந்ததுடன் பரிசுத் தொகையாக ஆறு இலட்சத்து அறுபதாயிரம்ஸ்ரேலிங்குகளையும் பெற்றுள்ளார். இவரை எதிர்த்து ஆடிய ஸ்பெயின் வீரர் 4 இலட்சத்து நாற்பதாயிரம் ஸ்ரேலிங்குகளை பரிசாக பெற்றுள்ளார்.

இந்தியாவின் பூர்வீகம்

கடந்த 10 வருடங்களாக இந்தியாவின் மூவர்ணக்கொடி சர்வதேச சதுரங்க அரங்கில் விஸ்வநாத்தின் சாதுரியத்தினால் கம்பீரமாகப் பறந்து வருகின்றது. மூளைக்கு அதிக வேலை கொடுக்கக்கூடிய இந்த சதுரங்க விளையாட்டில் இந்தியாவின் ஆதிக்கம் நிலை நாட்டப்பட்டதனால் இந்தியர்களுக்கு கௌரவம் கிடைத்தது போல ஆனந் ஒரு தமிழன் என்ற முறையில் நாமும் பெருமிதமும் பூரிப்பும் அடைகின்றோம்.

சதுரங்க விளையாட்டின் பூர்வீகம் இந்தியா தான் என்பதை யாவரும் ஒப்புக் கொண்டது உண்மை. இவ் விளையாட்டு இந்தியாவில் தொடங்கி 12 நூற்றாண்டுகளுக்குப் பின்பு தனது தாயகமான இந்தியா திரும்பியிருப்பது பெருமைக்குரிய விடயம் ஆகும். இடைப்பட்ட காலத்தில் பல்வேறு கண்டங்களைக் கடந்து, தற்போது தாயகம் திரும்பியுள்ளது.

சதுரங்க விளையாட்டு 6 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் தொடங்கியதாக இதிகாச நூல்கள் இயம்புகின்றன. தொடக்க காலத்தில் இந்தியாவில் மன்னர் ஆட்சி நிலவிய போது அரசர்கள் போர்ப்படையில் இடம்பெற்றிருந்த காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை ஆகிய 4 பிரிவுகளின் அடிப்படையில் தான் சதுரங்க விளையாட்டு தோன்றியது என்று கூறப்படுகின்றது.

இந்தியாவின் புகழ்

70 ஆவது – 80 ஆவது வருடங்களில் காடில்கர் சகோதரிகள் 3 பேர் தங்களது திறமையான ஆட்டத்தால் புகழ்பெற்று சதுரங்க விளையாடை பலரும் பேசும் அளவிற்கு கொண்டு வந்தார்கள். அதன் பிறகு இந்தியா அளவில் சதுரங்க புரட்சியை ஏற்படுத்தியவர் ஆனந் என்பது யாவரும் அறிந்த உண்மை.

பிரான்ஸ் நாட்டில் உள்ள சேம்பைன் நகரில் நடைபெற்ற உலக சதுரங்க சம்பியன்சிப் போட்டியே ஆனந் வெற்றி பெற்ற முதல் போட்டி ஆகும். இப் போட்டியே இவர் சதுரங்க ஆட்டத்தில் பேரும் புகழும் பெற உறுதுணையாக அமைந்தது.

ரசிகர்கள் மகிழ்வு

உலக சதுரங்க அரங்கில் சாது போல் நுழைந்த ஆனந் பல முன்னணி வீரர்களை வீழ்த்தி 1987 ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸில் நடைபெற்ற உலக யூனியர் சதுரங்க சம்பியன்சிப் பட்டத்தை வென்று உலக சதுரங்க ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தார். ஆனந்தின் வெற்றி இந்திய சதுரங்க அரங்கத்திலும் ரசிகர்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

உலக யூனியர் சதுரங்க பட்டம் வென்ற ஒரு வருட காலத்திற்குள்ளேய, ஆனந் இந்தியாவின் முதல் கிராம் மாஸ்டர் என்ற பட்டத்தையும் பெற்றார். அதுவும் தனது 17 ஆவது வயதிலேயே பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனந்தின் வெற்றி

1972 ஆம் வருட காலகட்டத்தில் அமெரிக்க வீரர் பாபி பினவுரை தவிர சர்வதேச அரங்கில் ரஷ்சிய வீரர்களின் ஆதிக்கமே ஓங்கி இருந்தது. அந்நாட்களில் காஸ்பரோ, கார்ப்போகிராமினிக் ஆகிய 03 பேர் கள் கொடிகட்டிப் பறந்தார்கள். இவர்களை யாரும் வெல்ல முடியாது என்ற நிலை நிலவியது. ஆனால் ஆனந் ரஷ்யர்களைச் சுற்றி எழுப்பப்பட்டிருந்த அரணை உடைத்து அவர்களை வெல்ல முடியாது என்றநம்பிக்கையை பொய்யாக்கிக் காட்டிப் புகழ் பெற்றார்.

இடைப்பட்ட சிலகாலம் ஆனந்திற்கு சரிவு ஏற்பட்டாலும் கூட, ஒவ்வொரு வருடமும் புதுமெருகுடன் வளர்ச்சி பெறத் தொடங்கினார். இயற்கையிலேயே திறமை படைத்தவரான ஆனந் பல்வேறு சர்வதேச போட்டிகளிலும் வெற்றிகளை குவிக்கத் தொடங்கினார்.

முதல் ஆசிய வீரர்

எதிர்பாராதசில தோல்விகளையும் ஆனந் சந்திக்க நேரிட்டது. உலக சதுரங்கப் போட்டியில் கால் இறுதி ஆட்டத்தில் 1992 ஆம் வருடம் அனடோலி கார்ப்போவிடமும் 1996 ஆம் வருடம் கடா காம்ஸ்கியிடமும் தோல்வியடைந்தார். தோல்விகளால் துவண்டு விடாத ஆனந் துணிந்து தடைகளை உடைத்தெறிந்து 1995 ஆம் ஆண்டு தனது சதுரங்க வாழ்வின் உச்சக் கட்டத்தை அடைந்தார். B.C.A நடத்திய உலக சதுரங்க போட்டியில் உலக சம்பியன் ஹேரி கஸ்பரோவை எதிர்த்துஆடத்தகுதி பெற்றார். இதன்மூலம் இறுதிப் போட்டி வரை ஆடிய முதல் ஆசிய வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

திறமை பெற்றார்

உலக சம்பியன்சிப் இறுதிப் போட்டியில் ஆனந் சம்பியன் கஸ்பரோவிடம் போராடி தோல்வியடைந்ததும் இவரது சதுரங்க வாழ்க்கை முடிந்தது என்று கூட ஒரு சில சதுரங்க வல்லுநர்கள் கூறினார்கள். ஆனால் ஆனந் மீண்டும் புத்துயிர் பெற்று உயிர்த்தெழுந்து பல பெரிய பட்டங்களை ஒன்றன் பின் ஒன்றாக வென்றெடுத்துத் தமது திறமையை நிரூபித்தார்.

உலகப்புகழ்

1996 ஆம் ஆண்டு நடைபெற்ற கிரடிஸ் சுவிஸ் வேக சதுரங்கப் போட்டியில் உலகச் சம்பியன் கஸ்ரோவை வென்றுசம்பியன் பட்டத்தை கைப்பற்றி தனது வஞ்சத்தை தீர்த்து கொண்டார். 1997 ஆம் ஆண்டு ஆனந்தின் சதுரங்க வாழ்க்கையில் மறக்க முடியாத இனிமையான ஆண்டாகும். ஏனெனில் இந்த வருடத்தில் தான் அவர் குறிப்பிடத்தக்க பல வெற்றிகளை பெற்று உலகப் புகழ்பெற்றார். அதே வருடத்தில் 7 போட்டிகளில் கலந்து கொண்ட ஆனந் 5 போட்டி

→ 2ஆம் பக்கம் பார்க்க

ஆகக்கூடிய தற்கொலை தாக்குதல் இலங்கையிலேயே இடம்பெற்றது

ஐரோப்பிய செய்தி நிறுவனம் தகவல்

(கொழும்பு)

1980 முதல் 2000 ம்ஆண்டு வரை உலகின் பல்வேறு நாடுகளிலும் 271 தற்கொலைத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளதாக (JAMES) என்ற பாதுகாப்புச் சஞ்சிகையை மேற்கோள் காட்டி ஐரோப்பிய செய்தி நிறுவனமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்படி 20 வருட காலப் பகுதியில் இடம் பெற்ற 271 தற்கொலைத் தாக்குதல்களில் ஆகக் கூடுதலான தற்கொலைத் தாக்குதல் இலங்கையில் விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் 168 தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாகவும் இந்த தற்கொலையாளிகளில் 30 வீதம் பெண் விடுதலைப் புலிகள் என்றும் தெரிவித்துள்ள அச் சஞ்சிகை, சர்வதேச ரீதியில் கூடுதலான அரசியல் வாதிகள் தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்ட நாடு இலங்கை என்றும் தெரிவித்துள்ளது.

கடந்த 20 வருட காலத்தில் மேற்கு ஆசியாவில் ஹிஸ்புல்லாற் அமைப்பு 52 தற்கொலைத் தாக்குதல்களையும், கமாஸ் அமைப்பு 22 தற்கொலைத் தாக்குதல்களையும், குர்திஸ்தான் தொழிற் கட்சி 15 தாக்குதல்களையும், ஒஸாமா பின்லேடன் 2 தற்கொலைத் தாக்குதல்களையும் நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

நிவாரண அனுமதிப் பத்திரம் நாளைமுதல் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளி பகுதி மக்களுக்கான, ஜனவரி மாத நிவாரண அனுமதிப் பத்திரம், நாளையும் நாளை மறுதினமும் வழங்கப்படுமென்று பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் எஸ். புத்திசிகாமணி தெரிவித்துள்ளார்.

இவ் நிவாரண அனுமதிப் பத்திரம் நெல்லியடி, சித்தன்கேணி, ஆனைக்கோட்டை பகுதிகளில் இடம்பெயர்ந்து வாழுகின்ற மக்களுக்கு அந்தந்தக் கிளைகளிலும், மந்திகை கோயிற் சந்தைக் கிளையினருக்கு புலோலி உப அலுவலகத்திலும் இரு நாட்களும் வழங்கப்படும்.

அதே நேரம் வல்வெட்டி சங்கக் கிளையினருக்கு நாளை வியாழக்கிழமை மாத்திரம் இவ் அனுமதி பத்திரம் வழங்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

புலிகளுடன்...

யொன்றிலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பை அலட்சியப் படுத்தி போரை அரசு தொடருமானால் அதனால் ஏற்படப் போகும் இழப்புகளுக்கும் அழிவுகளுக்கும் இலங்கை அரசே பொறுப்பேற்க வேண்டுமென்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

புலிகளின்யுத்த...

விடுதலைப் புலிகளின் இந்நடவடிக்கை சமாதானத் தீர்வு தொடர்பான தமது நடவடிக்கைகளுக்கு சாதகமாக அமையுமென தான் நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா அரசு யுத்தத்தை நீடிப்பது குறித்து அவரிடம் கேட்ட பொழுது அதுபற்றி கருத்துத் தெரிவிக்க மறுத்த அவர்;

தற்போதைய நிகழ்வுகள் இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுகாணும் விவகாரத்தில் மேலும் சிரமங்கள் இருப்பதையே எடுத்துக் காட்டுவதாகத் தெரிவித்துள்ளார்.

இவ் விடயத்தில் சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு குறித்து கருத்துத் தெரிவித்துள்ள எரிக் சோல்ஹெய்ம்.

சமாதானத்தில் ஆர்வமுள்ள சகலதரப்பும் இதனை வரவேற்பார்கள் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாகவும், எப்படியாயினும் அந்தந்த நாட்டு அரசுகள் தான் அதனை முடிவு செய்யவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் பேச்சு வார்த்தை மேற் கொண்டதாகவும் மேலதிக பேச்சு வார்த்தைக்காக தான் அடுத்த சில தினங்களில் மீண்டும் கொழும்பு செல்ல விருப்பதாகவும் எரிக் சோல்ஹெய் லண்டன் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு அளித்த பேட்டியின் போது மேலும் தெரிவித்துள்ளார். (ம)

ஐரோ...

றும் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளை சந்தித்து பேச்சு நடாத்தவுள்ளது.

சுமார் ஆறு பிரதிநிதிகளை உள்ளடக்கிய இத்தூதுக்குழு, வடக்குக் கிழக்கு பகுதிகளுக்கு விஜயம் செய்து, அகதிகளின் நிலவரங்கள் பற்றி நேரில் அறிவதுடன், அது பற்றி ஐரோப்பிய யூனியனுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமென இராஜதந்திர வட்டாரங்கள் தம்பிக்கை வெளியிட்டுள்ளன. (இ)

பேச்சுவார்த்தை...

இதேவேளை ஆளும் பொது ஜன முன்னணிப் பொதுச்செயலாளரும்அமைச்சருமான டி. எம். ஜயரத்தினாவிடம் இது தொடர்பாக கருத்துக் கேட்ட பொழுது

முதலில் நாம் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்போம். அந்தப் பேச்சு வார்த்தையில் கருத்துப் பரிமாற்றங்களின் போது, நிலைமையைப் பொறுத்து, இரு தரப்பு இணக்கப்பாட்டுடனான யுத்த நிறுத்தத்தையே விடுதலைப் புலிகளிடம் நாம் கேட்கின்றோம் என பதிலளித்தார்.

ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச விடம்இதுபற்றிகேட்ட போது

விடுதலைப் புலிகளின் இந்த யுத்த நிறுத்த நீடிப்பானது மேற்கு நாடுகளை திருப்திப் படுத்தும் ஒரு யுத்த உபாயம்.

யுத்த நிறுத்தத்தை நீடிக்க வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கின்றது. ஏனெனில் அவர்களது யுத்த நடவடிக்கைகளுக்கு அந் நாடுகளின் உதவி தேவைப்படுகின்றது என்றார்.

ஐக்கிய தேசியக்கட்சி பிரதித் தலைவர் கரு ஜயசூரிய விடம் யுத்த நிறுத்தம் பற்றிக் கேட்ட போது அது பற்றி ஆராய்ந்த பின்னரே கருத்துத் தெரிவிக்க முடியும் என்றார். (ந)

இரு சிறுவர் மரணம்

(கொழும்பு)

இராணுவக் கட்டுப்பாடற்ற வனனிப்பகுதியில், செப்ரிசீமியா காய்ச்சல் மற்றும் பாம்புக் கடிக்கு இலக்காகி இரு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

அந்தோனியார் கோவிலடி கந்தபுரத்தைச் சேர்ந்த இராசலிங்கம் முருகானந்தம் (வயது 10) செப்ரிசீமியாவினாலும், பண்டிதர் குடியிருப்பு முழங்காவிலைச் சேர்ந்த தேவராஜ் சத்தியராஜ் (வயது 04) பாம்புக் கடியினாலும் உயிரிழந்தவர்களாவர். (இ)

ஒரு..

அறிவித்துள்ளனர்.

யுத்த நிறுத்த நீடிப்பை புலிகள் அறிவித்திருக்கும் அதேவேளை அரச படையினர் ஆனையிறவுத் தளத்தை மீண்டும் கைப்பற்றுவதில் கண்ணும் கருதுமாக இருந்து போரைத் தீவிரப்படுத்தி வருகின்றனர்.

யுத்த நிறுத்தம் இன்று நள்ளிரவு 12 மணியுடன் முடிவடைய இருக்கும்வேளையில் புலிகள் மேலும் ஒரு மாதகால யுத்தநிறுத்தத்தை அறிவித்துள்ளனர் புலிகளின் இந்த யுத்தநிறுத்த அறிவிப்பானது, சர்வதேச சமூகம் யுத்தநிறுத்தத்திற்கானஅழுத்தத்தை இலங்கை அரசுக்கு வழங்க வேண்டுமென்பதை சுட்டிக் காட்டுவதாக அமைந்துள்ளது.

யுத்த நிறுத்தத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்க விடுதலைப் புலிகள் இதய சுத்தியோடு தீர்மானித்த போதும், அரசு புலிகள் மீது கொண்டுள்ள அவ நம்பிக்கையினால் யுத்த நிறுத்த அறிவிப்பு உத்தியோக பூர்வமாக வரவில்லை என்று தட்டிக் கழித்து வருகிறது.

இந் நிலையில் விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பிற்கு ஆதரவு வழங்கி இலங்கை அரசுக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ள இவ் வேளையில், அதனை ஏற்று இலங்கை அரசு யுத்த நிறுத்தத்தை அறிவிக்க முன்வரலாம் என்று நோர்வே இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளதுடன், நோர்வே தூதுவரின் இலங்கை வருகையில் சற்று காலதாமதம் ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பை ஐரோப்பிய நாடுகளும் இலங்கையில் உள்ள தமிழ்க் கட்சிகளும் வரவேற்றுள்ளன.

இதேவேளை யுத்த நிறுத்தத்திற்கான அழுத்தை இலங்கை அரசுக்கு கொடுக்க வேண்டுமென சர்வதேச சமூகத்தை விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர். (வ)

ஜனாதிபதியின் முயற்சிக்கு நோர்வே ஆதரவு வழங்கும் புதிய தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம் பெற்று வரும் இன யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மேற்கொண்டு வரும் சகல முயற்சிகளுக்கும் தமது நாடு தொடர்ந்து ஆதரவு வழங்குமென்றுநோர்வேயின் இலங்கைக்கானபுதிய தூதுவர் ஜோண் வெஸ்பேர்க்தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் தொழில் முயற்சியாளர்களுக்கான சேவை நிலையமொன்றை நேற்றுக் காலை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்; இலங்கையில் சமாதானத்தையும், அபிவிருத்தியையும் பாதிக்கும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி மேற்கொள்ளும் சகல முயற்சிகளுக்கும் தமது நாடு பூரண ஆதரவை வழங்கும் அதேவேளை இவ்விடயத்தில் இலங்கையின் இனப்பிரச்சினையில்நோர்வே ஈடுபடுவது சிலருக்கு ஒரு பிரச்சினையாக வுள்ளது. எனினும் இதுபற்றி நோர்வே கவலைப்படப்போவதில்லை என்றும் தெரிவித்தார்.

மேற்படி தொழில் முயற்சியாளர்களுக்கான சேவை நிலையம்நோர்வேயின் உதவியுடன் ஒரு கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

நீதிஅமைச்..

தற்பொழுது இயங்கிவரும் இத் தொல்லைதவிர்புக் குழு 1997ம் ஆண்டு முன்னாள் அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடிதலமையில் உருவாக்கப்பட்டது.

நீதியமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற இக்குழுக் கூட்டத்தில் பிரதி அமைச்சர் எஸ். கணேசமூர்த்தியை இக் குழு உறுப்பினராக நியமிக்கவும் ஜனாதிபதிமுடிவுசெய்துள்ளார். (இ)

பொ. ஐ..

ளாதாரக் கொள்கைகள் பற்றி ஆராயப்பட்டது:

பொதுஜனஐக்கியமுன்னணி அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளினால் நான்கு தடவைகளில் நாணயமதிப் பிறக்கம் செய்யப்பட்டதுடன் பொருளாதரம் வீழ்ச்சி அடைந்து கொண்டு செல்கிறது. இவற்றுக்கு முழுப் பொறுப்பையும் அரசே ஏறறுக் கொள்ள வேண்டும் என்று இக் கூட்டத்தில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்கா குற்றம் சாட்டியுள்ளார். (வ)

கினிகர..-

மடைந்ததாகவும்இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்தினா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இந்த இராணுவநடவடிக்கை நேற்று முன்தினம் இரவு ஆரம்பிக்கப்பட்ட போது புலிகளின் எதிர்த்தாக்குதல் இடம்பெறவில்லையென்றும், நேற்று அதிகாலை புலிகள மோட்டார் தாக்குதல்களையும், பலத்த எறிகணை வீச்சுக்களையும் மேற்கொண்டதாகவும் தெரிவித்தார்.

இப்படை நடவடிக்கைக்கு விமானப்படைக்கு சொந்தமான குண்டு வீச்சுவிமானமும், யுத்த உலங்கு வானூர்திகளும் பீரங்கிப்படையணியினரும் உதவியதுடன் பல்குழல் பீரங்கிகளும் தாராளமாக உபயோகிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்படை நடவடிக்கையின் போது தென்மாரட்சிப்பகுதியில் முகமாலைப் பகுதியும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள்வந்ததையடுத்து படையினர் பளையைநோக்கி முன்னேறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

புவியியற் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக புவியியற்கழகத்தின் ஏற்பாட்டில் பிரதி புதன்கிழமை தோறும் இடம் பெறவுள்ள கருத்தரங்குத் தொடரில் முதலாவதுகருத்தரங்குஇன்று புதன்கிழமை பி.ப3மணிக்குப் புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

புவியியற் கழகத் தலைவர் எஸ். ரவீந்திரன் தலைமையில் இடம் பெறவுள்ள மேற்படி கருத்தரங்கில் யாழ்பல்கலைக்கழக பௌதிகத்துறை தலைவர்பேராசிரியர்கே. கந்தசாமி ''உடுக்களின் பரிணாம வளர்ச்சி'' எனும்தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

புவியியற்றுறை மாணவர்கள் மாத்திரமன்றி ஆர்வமுள்ள எவரும் இக் கருத்தரங்கில் கலந்துகொள்ளலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது (உ)

இன்று சந்திப்பு

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக சுவீடன் தூதுவர் போஜிமத்தானை தமிழ்த் தலைவர்கள் இன்று சந்தித்துப்பேசவுள்ளனர்.

கொழும்பில் உள்ள சுவீடன் தூதரசத்தில் இடம்பெறவுள்ள இச் சந்திப் பின் போது இனப்பிரச்சினையில் தற்போதையநடப்பு விவகாரம் குறித்து சுவீடன் தூதுவரிடம் எடுத்துக்கூறப்படவுள்ளது. (வ)

அபிராமிப்பட்டர் திருவிழா

ஸ்ரீ மித்திரன் அம்பாள் தேவஸ்தானத்தில் அபிராமிப்பட்டர் தினவிழா இன்று பகல் அபிசேக ஆராதனையுடன் நடைபெற்று முத்துச் சப்பறத்தில் அம்பாள் வீதி உலா வரும். (உ-39)

யுத்தநிறுத்த...

லளிக்கத்தவறுமாகவிருந்தால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு தான் தயாராக இருப்பதாக அரசாங்கம் கூறிக்கொண்டிருப்பது வெறும் ஏமாற்றுவித்தை என்ற முடிவுக்கு தமிழினம் மட்டுமன்றி முழு உலகமுமே வரவேண்டியிருக்கும்.

அதுமாத்திரமன்றி புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்புக்கு அரசு பதிலளிக்கத்தவறினால் அது தமிழினத்துக்குச் செய்கின்ற மாபெரும் வரலாற்றுத் துரோகமாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

ஸ்ரீசெல்வா
(யாழ்ப்பாணம்)
விஜய், தேவயானி
சூர்யா
நடித்த
"ப்ரண்ட்ஸ்"
10-15 (ப. நே)
2-15 (ப. நே)
CD பிரதி
புதிய வெளியீடு

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தினரால் இல 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம், எனும் விலாசத்தில் அமைத்துள்ள வர்களது அச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு தனவரி மாதம் 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது